# செங்கதிர்

இலட்சியம் இல்லாமல் இலக்கியம் இல்லை





சாதனையாளர் சாலினி

50/=

இலங்கையிலிருந்து வெளிவரும்
கலை-இலக்கிய-பண்பாட்டுப் பல்சுவைத் திங்களிதழ்

சித்திரை
2008
வீச்சு : 4

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




"இலட்சியம் இல்லாமல்
இலக்கியம் இல்லை"

# செங்கதிர்

4

சித்திரை 2008 (தி.வ ஆண்டு 2039)

ஆசிரியர் : செங்கதிரோன்

தொடர்பு முகவரி
இல.19, மேல்மாடித்தெரு
மட்டக்களப்பு.
தொலைபேசி
065 2223950
077 3597045
மின்னஞ்சல்
senkathirgopal@gmail.com

ஆக்கங்களுக்கு
ஆக்கியோரே பொறுப்பு.

## ஆசிரியர் பக்கம்

மீண்டும் ஒரு தமிழ்-சிங்கள புத்தாண்டு (சர்வதாரி வருடம்) பிறந்துள்ளது. வழமைபோல் புதிய எதிர்பார்ப்புக்கள். நாட்டில் அமைதி தோன்றாதா என்ற நப்பாசை. ஆனால் மீண் டும் வேதாளம் முருங்கை மரத் தில் ஏறியதாகப் போர்ச்சூழல்.

'அரசியல் பிழைத்தோருக்கு அறங்கூற்று'. ஆட்சிக்கட்டிலில் அமர்ந்திருப்போர் அறத்தின் வழி செல்லாதுவிட்டால் அமைதி கெடும். ஒரு நாட்டின் ஆட்சிக் கட்டிலில் மட்டுமல்ல அதிகா ரத்தில் அமர்ந்துள்ள ஆள் எவ ரேனும் அவர் ஒரு நாட்டின் அதிபதியாயிருந்தாலென்ன, ஒரு நிறுவனத்தின் தலைவராக இருந்தாலென்ன, ஓர் அமைப் பின் அதியுயர் பதவியில் உள்ளவராக இருந்தாலென்ன, குறைந்தபட்சம் ஒரு குடும்பத் தலைவராக இருந்தாலென்ன அதிகாரத்தில் அமைந்திருப் போர் எவரோ அறத்தின் வழி செல்லாது அநீதி புரிவார்களா யின் அங்கு அமைதி அழியும். அராஜகங்களும், அட்டூழியங்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ளும் தான் கோலோச்சும். அதுவே அவர்களை அழிக்கவும் செய்யும். இது நாட்டிற்கும் பொருந்தும், வீட்டிற்கும் பொருந்தும். எனவே அதிகாரத்திலுள்ளோர் யாராயிருக்கட்டும் அறத்தின் வழி நின்று செயல்படுவோம் என இப்புத்தாண்டிலாவது சங்கற்பம் பூணுவோம். அவ்வாறு அனைவரும் செயற்பட்டால் சமாதானமும் அமைதியும் தானாகவே வரும். "தர்மத்தின் வாழ்வதனைச் சூது கவ்வும். பின் தர்மம் மறுபடி வெல்லும்" என்ற நம்பிக்கையோடு பிறந்துள்ள தமிழ் - சிங்கள புத்தாண்டை எதிர்கொள்வோம்.

- செம்மதிரோஜா -

**"செங்கதிர்" கட்டண விபரம் : (அஞ்சல் செலவு உட்பட)**

| | இலங்கை | இந்தியா | வெளிநாடு |
|---|---|---|---|
| அரையாண்டுக்கட்டணம் | 500/- | 250/- | U.S.$ 10 |
| ஓராண்டுக் கட்டணம் | 1000/- | 500/- | U.S.$ 20 |
| ஆயுள் கட்டணம் | 10,000/- | 5000/- | US$ 100 |
| புரவலர் கட்டணம் | 25,000/- | 12,500/- | US$ 250 |

ஆயுள் கட்டணம் செலுத்துவோருக்கு வாழ்நாள் முழுவதும் "செங்கதிர்" வழங்கப்படும். புரவலர்களுக்கு வாழ்நாள் முழுவதும் "செங்கதிர்" வழங்கப்படுவதுடன் "செங்கதிர்" எதிர்காலத்தில் வெளியிடவுள்ள எல்லா நூல்களும் இலவசமாக வழங்கப்படும்.

**விளம்பரக் கட்டணம்**

| | | | | |
|---|---|---|---|---|
| பின் அட்டை வெளிப்புறம் | முழு | 5000 | 1500 | US$ 50 |
| | அரை | 3000 | 1000 | US$ 30 |
| முன் அட்டை உட்புறம் | முழு | 3000 | 1000 | US$ 30 |
| | அரை | 2000 | 750 | US$ 20 |
| பின் அட்டை உட்புறம் | முழு | 2000 | 750 | US$ 20 |
| | அரை | 1500 | 500 | US$ 15 |

**அன்பளிப்பு**

அன்பளிப்புச் செய்ய விரும்புவோர் (உதவும் கரங்கள்) தாங்கள் விரும்பும் தொகையை ஆசிரியரிடம் வழங்கலாம்.

வங்கி : மக்கள் வங்கி (நகரக்கிளை), மட்டக்களப்பு

கணக்கு இல : 113160138588996 (நடைமுறைக்கணக்கு)

காசுக்கட்டளை : அஞ்சல் அலுவலகம், மட்டக்களப்பு

காசோலைகள் / காசுக்கட்டளைகளை த.கோபாலகிருஷ்ணன் என்று பெயரிடுக.



# அதிதிப்பக்கம்



'செங்கதிர்' இதழின் இம்மாத அதிதி கிழக்குப் பல்கலைக்கழக நுண்கலைப் பீடத் தலைவர் பேராசிரியர் சி.மௌனகுரு அவர்களாவர்.

தனது ஆரம்பக் கல்வியை தனது பிறந்த கிராமமான மட்டக்களப்பு அமிர்தகழி மெதடிஸ்த மிஷன் பாடசாலையில் (தற்போது அமிர்தகழி மகா வித்தியாலயம்) பெற்றார். ஐந்தாம் வகுப்பு புலமைப் பரிசில் பெற்றுச் சென்ற வந்தாறுமூலை மத்திய மகா வித்தியாலயம் இவரது உயர்கல்விக்கு வழிகாட்டிற்று. பாடசாலைக் காலத்தில் இவர் பங்குபற்றிய **'பாசுபதம்'** கூத்து சு.வித்தியானந்தன் அவர்களைக் கவர்ந்தது. பேராதனைப் பல்கலைக்கழகத்தில் தமிழ் மொழி மூலம் தெரிவுசெய்யப்பட்ட இரண்டாவது தொகுதி - மட்டக்களப்பில் இருந்து சென்ற முதலாவது தொகுதி மாணவர் குழாத்தில் இவர் இடம் பெற்றார். பல்கலைக்கழக காலத்தில் பல கூத்துக்களில் நடித்தவர். முக்கியமாக **'இராவணேசன்'** கூத்து. பல்கலைக்கழகக் கல்வியின் பின்னர் ஆசிரியராக - கல்வி அமைச்சின் பாடவிதான அபிவிருத்தி நிலையத்தின் பாடநூல் எழுத்தாளராக - இலங்கை வானொலி நிகழ்ச்சித் தயாரிப்பாளராக - அகில இலங்கை முற்போக்கு எழுத்தாளர் சங்க நாடகக் குழுவின் செயலாளராக - யாழ் கல்வி வலயத்தின் ஆசிரிய ஆலோசகராக - பலாலி ஆசிரிய பயிற்சிக் கல்லூரி விரிவுரையாளராக - யாழ் பல்கலைக்கழக விரிவுரையாளராக - கிழக்குப் பல்கலைக்கழகத்தில் கலை, பண்பாட்டுத்துறை பீடாதிபதியாக - பதில் துணைவேந்தராக - சுவாமி விபுலானந்தர் இசை நடன வளாகத்தின் இணைப்பாளராக, இவ்வாறு பல ஆளுமைகளை அலங்கரித்த இவர் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் முதுமாணிப் பட்டத்தையும், கொழும்பு பல்கலைக்கழகத்தில் கல்வி டிப்ளோமா பட்டத்தையும் பெற்றவர்.

இலங்கையில் கூத்துக்கலையை பல்கலைக்கழகத்துக்கு எடுத்துச் சென்று நவீனமயப்படுத்தும் பணியில் ஈடுபட்ட பேராசிரியர் சு.வித்தியானந்தனுடன் தனது பல்கலைக்கழக மாணவ காலத்திலிருந்தே அவருடன் அன்னாரின் இறப்பு வரை கைகோர்த்து நின்று பல சாதனைகள் படைத்தவர். கூத்தை ஈழத் தமிழரின் தேசியக் கலைவடிவமாக வளர்த்தெடுக்கும் வரலாற்றுத் தேவையில் தன்னை ஈடுபடுத்தி வரும் - எழுத்தாளர் அன்புமணியின் வார்த்தைகளில் கூறுவதானால் **கூத்துக் கலையை ஆய்வு செய்து அது பரத நாட்டியம் போன்றதொரு செந்நெறிக்கலை (Classical Dance) என நிறுவிய.....** (**'மௌனம்'** பேராசிரியர் சி.மௌனகுரு மணிவிழாச் சிறப்பு மலர் - 2003) பேராசிரியர் சி.மௌனகுரு அவர்களை 'செங்கதிர்' இதழின் இம்மாத அதிதியாக அறிமுகப்படுத்துவதில் 'செங்கதிர்' பெருமையும் மகிழ்ச்சியும் அடைகிறது.

- ஆசிரியர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாடகத்தால் ஞானநிலை

சி.ஜெகன்குரு

நாடகக் கலை ஏனைய கலைகளை விட வித்தியாசமான ஒரு கலையாகும். கலைகள் தருவன வெல்லாம் ஓரிடத்துத் தொகுத்துக் கூறும் கலை இது. அத்தோடு ஓவியம், சிற்பம், கட்டிடம், இசை, நடனம், என அனைத்துக் கலைகளையும் ரசிக்கும் முழுமையான கலையுணர்வு இக் கலையைப் பார்ப்பதால் நமக்கு உண்டாகிறது.

இக்கலைக்குப் பல முகங்கள் உள்ளன. உலகமே ஒரு நாடக மேடை அதில் நடிக்கும் நடிகர்கள் தான் மனிதர்கள் என்றுரைத்தார் ஆங்கில நாடகாசிரியரான ஷேக்ஸ்பியர்.

நாடகத்தைப் பார்க்க விரும்பாதவர் யாருமே இல்லை. அதில் பங்குகொள்ள, பார்வையாளராக இருக்க ஒவ்வொருவரும் விரும்புவர். நாடகத்தில் ஏதோ ஒரு வகையில் பங்கு கொள்கையிற் கிடைக்கும் அனுபவம் மனிதர்களின் மன இறுக்கங்களைக் குறைத்து அவர்களைத் தளர்நிலைக்குக் கொண்டு வருகிறது. கண நேரத்துக்குள் கோபம், பயம், இரக்கம், அழுகை, சிரிப்பு, அருவருப்பு எனப் பல்வேறு உணர்வுகளை அக்கலை ஏற்படுத்திவிடுகிறது.

அது காட்டும் காட்சிகளில் நம்மைக் காண்கிறோம். கண்ணாடி நம் விம்பத்தை நமக்கு காட்டுவது போல நாடகம் ஒரு வகையில் நம் குணாதிசயங்களை நமக்கு காட்டுகிறது.

ஏனைய கலைகளைவிட இது இயங்குகின்ற நிலையில் எப்போதும் உள்ள கலையாகும். இதனைச் சக்தி மிக்க இயங்குகலை (Dynamic Art) என்பர். நாடகத்தில் பங்குகொள்ளும் மக்களை அவர்கள் அதனாற் பெறும் மன உணர்வினை அடிப்படையாகக் கொண்டு நான்கு வகையினராக வகுக்கலாம்.

1) மிகச் சாதாரணமானவர்கள்
2) சாதாரணமானவர்கள்
3) உயர் நிலையினர்
4) அதி உயர் நிலையினர்

நாடகத்தில் நடிப்பதால் புகழ் கிடைக்கிறது. அல்லது அதில் ஈடுபடுபவர் பலரும் அறிந்தவராகிவிடுகின்றனர். மற்றவர் மதிக்கும் போது, அவரைப் புகழும் போது நாடகக் கலைஞருடைய அகம் (Ego) திருப்தியடைகிறது. இச்சுய திருப்தியினை மாத்திரம் அடைபவர்களை நாம் மிகச் சாதாரணமானவர்கள் என அழைக்கலாம்.

நாடகத்தில் பங்கு கொள்கையில், நடிக்கையில், ஆடுகையில், பாடுகையில் பங்கு கொள்வோரின் மனதில் ஒரு புது உற்சாகமும், மகிழ்ச்சியும் திருப்தி நிறைவும், உடல் உளத் தடைகளை நீக்கி ஒரு தளர் நிலை தோன்றும். இது பெரும் மனமகிழ்வை, உளத் திருப்தியை ஏற்படுத்தும். மக்கள் பாராட்டினாலும், பாராட்டாவிட்டாலும் இக்கலையில் ஈடுபடுவதன் மூலம் ஒரு சுய திருப்தி கிடைக்கும். இச் சுயதிருப்தியைப் பெறுபவரை நாம் சாதாரணமானவர்கள் எனலாம்.

நாடகம் ஒரு கூட்டுக்கலையானமையினால் நாடகத்தில் ஈடுபடும் போது மனிதர் நெருக்கமாக உறவாட முடிகிறது. மற்றவர்களின் பிரச்சினைகளை அறியமுடிகிறது. பாத்திரங்களை ஏற்று நடிக்கும் போது அப்பாத்திரங்களின் குணாதிசயங்களை ஆராய்ந்து அறிந்து அப்பாத்திரமாக மாறுவதன் மூலம் பிறரின் உணர்வுகளை, அவர்களின் பின்னணியில் வைத்து அறியமுடிகிறது. இதனால் மனிதர்களைப் புரிந்துகொள்ளும் பக்குவம் வாய்க்கிறது. இப்பக்குவ நிலை பெறுவோரை நாம் உயர் நிலையினர் எனலாம்.

இப்பக்குவ நிலையைப் பெற்றோர் தம்மை அறியும் நிலைக்குச் செல்வர். சமூகத்தில் தம் இருப்பு தான் யார் என்று உள் முகமாகத் தேடத் தொடங்குவர். தன்னையே ஓர் ஆய்வுப் பொருளாக்கி, தன் சின்னத்தனங்களைக் கண்டு தானே சிரிக்கும் பக்குவம் பெறுவர். தம்மோடு தாமே தினமும் உரையாடி தினமும் தன்னை மேம்படுத்த முயல்வர். இப் பயிற்சி அவர்களுக்கு உள்முகத் தேடலையும் ஆன்மீக உளத் திருப்திகளையும் தந்து பேரின்ப நிலைக்கு அவர்களை இட்டுச்செல்லும். இத்தகைய மனநிலையினை நாடகத்தால் பெறுவோரை நாம் அதியுயர் நிலையினர் எனலாம்.

இந் நான்கு நிலைகளும் அவர்களின் வயது, அநுபவம், முதிர்ச்சி, அறிவு என்பவற்றிற்கேற்பத்தக்க அமையும். எனவேதான் இவற்றினை ஒன்றாகக் கணிக்குமிடத்து நாம் ஜாக்கிரதையாக இருக்க வேண்டும். சிறு வயதில் முதிர்வு பெறுவோரும் உண்டு. வயது அதிகம் சென்று முதிராதோரும் உண்டு. திருநாவுக்கரசர் எண்பது வயதினராயினும் சம்பந்தர் சிறு வயதிலேயே இறை அனுபவம் பெற்று விட்டார். மிக முதிர்ந்த வயதுடைய கோயிற் குருவானவரை விட இளம் வயதினரான இயேசு கிறிஸ்து இறை அனுபவம் பெற்று முதிர்ச்சியுடையவரானார். நாடகத்தில் ஈடுபடுவோரிடமும் இதனைக் காணலாம்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மிக இளம் வயதிலேயே நாடகக்காரர் முதிர்ந்த தத்துவவாதிகளாக இருந்த செய்திகளும் உண்டு. நாடகம் ஞானநிலைக்கும் தன்னை அறியும் உன்னத நிலைக்கும் இட்டுச் செல்லும் ஒரு கலையாகும்.

நடிகர்கட்குத் தேவையானவை நெகிழ்ச்சியான எதற்கும் இசைந்து கொடுக்கும் உடல், கற்பனை வளம் நிறைந்த மனம், வளம் நிறைந்த குரல் இம் மூன்றும் அனைத்து மனிதர்களிடமும் உண்டு. அவற்றை நாம் விருத்தி செய்வதில்லை. நாடகப் பயிற்சி இவற்றை விருத்தி செய்ய உதவுகிறது. நாடகப் பயிற்சியில் பெறும் உடற்பயிற்சி உடலை எதற்கும் வளைக்கும் பொருளாக்குகிறது. நாடகப் பயிற்சியில் வழங்கப்படும் மனதை ஒருநிலைப்படுத்தும் பயிற்சியும், விளையாட்டுக்களும், கூட்டுச் செயற்பாடும் திடமான மனதை உருவாக்குகின்றன. கற்பனை செய்ய அளிக்கப்படும் பயிற்சி கற்பனை ஆற்றலைத் தூண்டுகிறது. இதனால் கற்பனை வளமும் கண்டுபிடிப்புக்களைச் செய்யக்கூடிய திறனும் ஏற்படுகிறது.

பலருடனும் இணைந்து பணி மாற்றும் பக்குவமும் மன விரிவும் ஏற்படுகின்றது. நாடகத்தில் பாத்திரம் தாங்கும் போது அப்பாத்திரத்தின் குணாதிசயத்தினை அக்குறிப்பிட்ட ஆளின் [illegible] பிரித்துப் பிரித்துப் பார்க்க முடிகிறது. இன்னொரு பாத்திரமாக வாழ்வதால் மற்றவர்களின் மன ஓட்டம் என்ன என்பதை அறிய முடிகிறது. இதனால் மனிதர்களின் குணாதிசயங்களை அறிய முடிகிறது. திருடும் திருடன் கூட அதற்கான வலுவான நியாயங்களை வைத்திருப்பான் என அறிய முடிகிறது. தன்னைப் போல் பிறரையும் நேசிக்கும் பக்குவ நிலை ஏற்படுகிறது.

நாடகப்படிப்பில் உலக நாடகங்கள் அவற்றின் உள்ளடக்கம், வரலாறு, பாணி என்பவற்றைப் படிக்கையில் எம்மை அவர்களுடன் ஒப்பிட முடிகிறது. இதனால் பரந்த உலகஞானம் வாய்க்கிறது.

இவ்வகையில் பரந்த உலக ஞானம், பிறரையும் நம்மைப் போல கருதும் பண்பு என்பன வாய்க்கப் பெற்று இப்படிப்பட்ட ஒரு ஞான நிலைக்கு நம்மை நாடகம் இட்டுச் செல்லுகின்றது.

ஞானம் என்பது யாதும் அனைத்தையும் அனைவரையும் சமமாக எண்ணும் நிலை. பீட்டர் புறூக் மகா பாரதம் தயாரித்தார். இந்திய இதிகாசத்திலுள்ள மாந்தரின் குணாதிசயங்களை உலக மாந்தரின் குணாதிசயங்களாக கண்டார். இதற்குக் காரணம் அவர் நாடகப் படிப்பு மூலம் பெற்ற மனவிரிவும் அதனால் அடைந்த ஞான நிலையுமே. ■





# சாதனையாளர் சாலினி



**2007ம்** ஆண்டு டிசம்பரில் நடைபெற்ற கல்விப் பொதுத்தராதரப்பத்திர (சாதாரண) பரீட்சையில் தமிழ் மொழி மூலத்தில் அகில இலங்கை ரீதியாக முதலாமிடத்தைப் பெற்றுள்ளார், அம்பாறை மாவட்டம், காரைதீவு விபுலாநந்த மத்திய கல்லூரி மாணவி **செல்வி. சாலினி சந்திரசேகரன்** அவர்கள்.

சாலினியின் தந்தை சம்மாந்துறை, வீரமுனையைச் சேர்ந்தவர். பயிற்றப்பட்ட விஞ்ஞான ஆசிரியரான இவர் 2004 இல் அமரத்துவம் அடைந்துவிட்டார். மேலும் காரைதீவு அமரர் சைவப்புலவர் பண்டிதர் வி.சி. செல்லத்துரை அவர்கள் சாலினியின் (அம்மப்பா) பாட்டனாராவர். தன்னைச் சந்தித்து வாழ்த்திய கல்விமான்களிடமும் ஊடகவியலாளர்களிடமும் சாலினி கூறியவை.

- இத்தனை சாதனை படைப்பேன் என்று எண்ணவில்லை. எனினும் சகல பாடங்களிலும் (10A) A சித்திபெறுவேன் என்ற நம்பிக்கை இருந்தது. மாவட்ட ரீதியில் முதலாமிடத்தைப் பெற வேண்டும் என்று எண்ணியே படித்தேன். அதன் பிரதிபலிப்பே இச்சாதனை.
- எனது தந்தை காலமாகிவிட்டதால் பிரத்தியேக வகுப்புகளுக்குச் செல்லும் வசதியில்லை. எனது ஆசிரியர்கள் மிகவும் உதவினர். கணனியில் [illegible] நம்பியவர்களில் நானும் ஒருத்தி.
- பெரிதாகக் கஷ்டப்பட்டுப் படித்தேன் என்றில்லை. இரவில் 9 மணிவரை படிப்பேன். காலையில் 5 மணிக்கு எழுந்து படிப்பேன். கடந்தகால வினாப்பத்திரங்களைத் தேடி எனது சுயமுயற்சியுடன் செய்தேன். பாடசாலையில் படித்ததை அன்றைக்கே மீட்டல் மீட்டல் செய்வேன். பத்திரிகைகள் வாசிப்பேன். தொலைக்காட்சி செய்திகள் பார்ப்பேன். நூலகத்தை முடிந்தவரை பயன்படுத்தினேன். என்னைக் கற்பித்த ஆசிரியர்களையும் ஊக்கமளித்த பெற்றோரையும் மதிக்கிறேன்.
- முத்தமிழ் வித்தகர் சுவாமி விபுலாநந்தர் அவதரித்த காரைதீவு மண்ணிலிருந்து இச்சாதனையை ஈட்டியதன் மூலம் இம்மண்ணிற்குப் பெருமை தேடிக் கொடுத்ததையிட்டு பெரு மகிழ்ச்சியடைகிறேன்.
- உயிரியல் துறையில் உயர்கல்வி பெறவேண்டும் என்பதே எனது எதிர்கால இலட்சியம்.

**சாதனையாளர் சாலினியை '[illegible]' வாழ்த்தி மகிழ்கிறது.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சிரிக்கவும் சிந்திக்கவும் ஒரு கதை

அந்தக் கிராமத்தில் ஒரு படித்த குடும்பம். கணவனும், மனைவியும் பண்டிதர்கள். ஓய்வுபெற்ற ஆசிரியர்கள். பண்டிதர் குடும்பத்திற்கு வயற்காணிகள், மாடு, கன்றுகள் எனக் கிராமச் சொத்துக்கள் ஏராளம். மாடுகளைப் பராமரிக்கப் புதிதாக ஒரு சிறுவன் வந்து சேர்ந்தான். அவர்களிடம், வேலைக்கு வரும் சிறுவர்களுக்குத் தன் மனைவி. பால், தயிர் என நிறையச் சாப்பிடக் கொடுத்து அவர்களைச் சோம்பேறிகளாக்குவதாகப் பண்டிதருக்கு எப்போதுமே ஒரு அபிப்பிராயம்.

அன்றும் புதிதாக வந்த சிறுவன் கந்தசாமிக்கு அவன் "போதும், போதும்" என மறுக்க "சாப்பிடு, சாப்பிடு" என மனைவி உபசரிப்பதைப் பார்த்து எரிச்சலுற்ற பண்டிதர், "சாப்பாட்டை அளவுக்குக் கொடு" என்னும் கருத்துப்பட "மட்டுக்கு மட்டு டையோ டையோ" என்று பாடினார். பையனுக்குப் புரியாதபடி பண்டிதர் மனைவியும் அதேபாணியில் "மருவு மட்டும் டையோ டையோ" என்று பாடினார். அதாவது பையன் கொஞ்சம் பழக்கப்படும் மட்டும் தான் என்கிற அர்த்தத்தில்.

இவர்களது சங்கேதப் பாடலை எப்படியோ யூகித்துக் கொண்ட சிறுவன்,

"கட்டின மாடு கட்டையோடே

கந்தசாமியும் டையோ டையோ" என்று கட்டிய மாடுகளை அப்படியே விட்டுவிட்டு நானும் போய்விடுவேன் என்கிற கருத்துப்படப் பாட, விக்கித்துப் போனது பண்டிதர் குடும்பம்.

*திருமதி. யோகா யோகேந்திரன்*

நன்றி
60 களில் வெளிவந்த கமத் தொழில் விளக்கப் சஞ்சிகை.



இலக்கியச் சந்திப்பு

## கலைஞர் ராஜகுரு சேனாதிபதி கனகரத்தினம் + உடப்பூர் வீரசொக்கன்





### வானொலி ஒலிபரப்பில் அகலக் கால்பதித்த கனகரத்தினம்

புத்தளம் மாவட்டத்தில் சிலாபம் தொகுதியில் அழகிய தமிழ் கிராமமே மருதங்குளம். இக்கிராமத்திலிருந்து கல்விமான்களும், புத்தி ஜீவிகளும், நாடகக் கலைஞர்களும் உருவாகியுள்ளனர். இவர்களில் பல்துறை கலைஞராக - ஓர் சிறந்த கவிஞராக ஒர் ஒலிபரப்பாளராக மதிப்புடன் பிரகாசித்தவர் தான் ராஜகுரு சேனாதிபதி கனகரத்தினம்.

இலங்கை ஒலிபரப்புத் துறையில் நீண்ட காலமாக பல்துறையில் ஆற்றல்களை வெளிப்படுத்தி அகலக்கால் பதித்த ராஜகுரு சேனாதிபதி கனகரத்தினம் வானொலியோடு இணைந்து நாற்பது வருட காலம் சேவையிலிருந்து ஓய்வு பெற்றுள்ளார்.

வானொலி ஒலிபரப்பு என்றால் கனகரத்தினமாகவும், கனகரத்தினம் என்றால் வானொலி என தன்னை இத்துறையில் இரண்டறக் கலந்து வாழ்ந்தார்-அதனுடன் இணைந்தார். தன் வாழ்நாள் முழுவதும் தன்னை அர்ப்பணித்து சேவை புரிந்தார் வானொலியுடன்.

கனகரத்தினம் காத்திரமான படைப்புக்களை வானொலி மூலம் வெளிப்படுத்தியுள்ளார். பல புதிய நிகழ்ச்சிகளை ரசனையுடன் நேயர்களுக்கு வழங்கியுள்ளார். இலக்கியம் சார்பான நிகழ்ச்சிகளை தனக்கே ஏற்ற பாணியில் ஒலிபரப்புவதில் முன்னணியில் திகழ்ந்துள்ளார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ராஜகுரு சேனாதிபதி கனகரத்தினம் சிறந்த ஓர் கவிஞர் என்பதை அடையாளப்படுத்த இலங்கையில் வெளிவந்த திரைப்படமான 'இளைய நிலா' திரைப்படத்ததுக்கு இவர் எழுதிய பாடல்களே சான்று.

'என்றுயிர்', 'கம்பனும் கவிஞரும்', 'மனம் போன போக்கில்', 'மன்னருக்கு கோபம் வந்தால்' போன்ற நூல்களை படைத்து வெளியிட்டுள்ளார். கவிஞர் கண்ணதாசனுடன் மிக நெருங்கிய உறவுடன் பழகியதுடன் கவிஞரின் குடும்ப நண்பராகவும் காணப் பட்டார்.

ராஜகுரு சேனாதிபதி கனகரத்தினம் ஆற்றல் நிறைந்த, ஆளுமை நேயம் கொண்ட பல்துறை கலைஞராவார்.

- உடப்பூர் வீரசொக்கன் -

1) கேள்வி: நீங்கள் அறிவிப்பாளர் ஆகுவதற்கு ஆரம்ப பின் புலக் காரணங்களாய் இருந்தவை என்ன?

பதில்: வானொலிப்பெட்டிகள் மிகவும் அரிதாக இருந்த காலம் அது. எங்கேயாவது ஒன்று இருக்கும் முதலில் கேட்டபோது, அதை ஒரு வானத்துப் பிறவி என்று நினைத்தேன். மிகவும் உயர்ந்தவன், இது ஒருவனுக்கு எளிதில் கிடைக்காத இடம் என்று எண்ணினேன். இந்த இடம் கிடைத்தால் நல்லது என்று எண்ணினேன். அவ்வாறே நடந்துவிட்டது.

2) கேள்வி: அறிவிப்பாளர் ஒருவரின் ஆளுமையும், அவர் பாணியும் எவ்வாறு இருக்கவேண்டும் என்று நினைக்கிறீர்கள்?

பதில்: அவர் பாணிக்கு வானொலி செல்லக்கூடாது. ரசிகர்கள் புரிந்து கொள்ளக்கூடிய பாணிக்கு அறிவிப்பாளர் வர வேண்டும். ரசிகர் பாணிக்கு அவர் வந்தால் ஆளுமை தானாக வந்துவிடும்.

3) கேள்வி: ஒரு அறிவிப்பாளருக்கு இருக்க வேண்டிய பண்புகள் பற்றி சொல்லுங்கள்.

பதில்: ஒழுக்கத்தில் சிறந்தவனாக இருக்கவேண்டும். பொய் பேசாது இருத்தல் நல்லது. மற்றவனையும் மதித்து நடக்கும் பணிவு அவனுக்கு இருக்க வேண்டும். மிகவும் எளியவனாய் இருந்தால் மிகவும் நல்லது. வானொலி சரித்திரம் அப்படியில்லை.



4) கேள்வி: அன்றைய வானொலிக்கும், போட்டி போட்டுக் கொண்டு இன்று வந்துள்ள வானொலிகளுக்கும் வேறுபாடு என்ன?

பதில்: அன்று வானொலிக்கு அறிவிப்பாளர்கள் இருந்தார்கள். இன்று அறிவிப்பாளர்களுக்கு வானொலி இருக்கிறது. அன்று உண்மை இருந்தது; இன்று அது இல்லை. அன்று தமிழ் இருந்தது இன்று அவர்கள் பேசுவதுதான் தமிழ் என்று கொள்ள வேண்டியிருக்கிறது. அன்று அடுத்த நிகழ்ச்சியை எவ்வாறு செய்வது என்று அறிவிப்பாளர்கள் யோசித்தார்கள். இன்று சம்பளம் எப்போது, என்று கிடைக்கும், எத்தனை கிடைக்கும் என்று யோசிப்பார்கள்.

5) கேள்வி: மூத்த அறிவிப்பாளர் என்ற முறையில் இளைய தலைமுறையினருக்கு என்ன கூற விரும்புகிறீர்கள்?

பதில்: ஒலிபரப்பில் ஆர்வமும் திறமையும் இருந்தால் இருங்கள். அவை இல்லையென்றால் வேறொன்றைத் தேடிக் கொள்ளுங்கள். உழைக்கும் வழி என்று கொள்ள வேண்டாம். உங்களால் ஒலிபரப்புக் கெட்டுப்போய் விடும்.

6) கேள்வி: இன்றைய ஒலிபரப்பில் தவறுகள் இருக்கின்றன. இதற்கு என்ன காரணம் சொல்லுவீர்கள்?

பதில்: மேலே இருப்பவன் ஒலிபரப்பு தெரிந்தவனாக இல்லை. தெரிந்தவனாக இருந்தால், நல்ல நிர்வாகியாக இருந்தால் தவறு வரக்காரணம் இல்லை. அவர்களுக்கு பணம் தான் உயிர் நாடி. ஒலிபரப்பு பற்றிய கவலை இல்லை. பேய் ஆட்சி செய்தால் பிணம் தின்னும் சாத்திரங்கள் என்று இறைத்தால் சொன்னான் பாரதி.

7) கேள்வி: ஒருவன் அறிவிப்பாளராக வரவேண்டுமென்றால் அவனுக்கு என்ன தகுதிகள் வேண்டும்?

பதில்: அவன் நாலும் தெரிந்தவனாக இருக்க வேண்டும். மற்றவன் புரிந்து கொள்ளும்படி சொல்லக் கூடிய திறமை வேண்டும். நல்ல மொழிவளம் இருக்க வேண்டும். சாண் வைத்துக் கொண்டு முழம் போட முடியாது. குரல் கூட முக்கியமில்லை. அது காலப் போக்கில் சரியாகிவிடும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

8) கேள்வி: தங்களின் எழுத்துத் துறையை விபரியுங்கள்?

பதில்: எனக்கு நல்ல தமிழில் ஆசை. நல்ல தமிழ் கேட்டால் அங்கே இருந்து விடுவேன். இங்கு பலர் எழுதுகிறார்கள். அவர்கள் தமிழ் எனக்குப் பிடித்ததாக இல்லை. கண்டது எதையும் படிப்பேன். அவன் தமிழும் அவன் நடையும் தான் முக்கியம். சஞ்சிகை முக்கியமல்ல. அதிலுள்ள தமிழ்தான் முக்கியம். கதைகள் நான் விரும்பிப் படிப்பதில்லை. கற்பனைக் கதைகளில் அக்கறை இல்லை. உண்மைக் கதைகள், கட்டுரைகள், விவகாரங்கள், தகவல்கள் படிப்பேன். பிடித்த எழுத்தாளன் கண்ணதாசன். தமிழ் என்று இதுவரை நான் படிக்காத பல சொற்கள் இப்போது இருக்கின்றன. யாரை நோவது என்று தெரியவில்லை. எழுதும் பழக்கம் எனக்கும் உண்டு. படித்துப் பாருங்கள்.


9) கேள்வி: அறிவிப்பாளர் என்ற முறையில் உங்களுக்கு மறக்க முடியாத சம்பவம் ஏதும் உண்டா?

பதில்: உண்டு. வானொலி, கூட்டுத்தாபனமானபோது ஒரு தேர்வு நடந்தது. அதில் என்னை வேண்டாம் என்று தள்ளி விட்டார்கள். ஒன்பது ஆண்டுகள் அதற்காக உழைத்த பின்பு அப்போது வந்த விமல் சொக்கநாதனை நியமித்து விட்டார்கள். அப்போது எனக்கு மேலே இருந்தவர் நமசிவாயம். அவருக்கு மேலே ப்ரொஃபர் பெர்னாந்து என்றொருவரிருந்தார். நான் வீட்டிற்குச் சென்று விட்டேன். இத் தகவலை நமசிவாயம் அவர்கள் ப்ரொஃபருக்கு சொல்லி விட்டார். அப்போது பணிப்பாளர் நாயகமாக இருந்தவர் நெவில் ஜயவீர என்றொரு I.A.S காரர். அவருக்கு ப்ரொஃபர் பெர்னாண்டோ சொல்லி விட்டார்கள். உடனே தேர்வு நடத்தியவர்கள் அழைக்கப்பட்டார்கள். நடந்தது ஆராயப்பட்டது. திரு. நமசிவாயம் வீடு தேடி வந்து என்னை அழைத்துச் சென்றார். சொக்கநாதனுக்கு கொடுத்த பத்திரம் ரத்துச் செய்யப்பட்டது. என் மேலதிகாரியாக இருந்தவர் விஜயமான, என்னை வேண்டாம் என்று சொன்னவர் எங்களோடு இருந்த தமிழ் அதிகாரி என்று சொன்னார். இது நடக்கவில்லையென்றால் நான் எங்கேயாவது ஒரு நிலையில் இருந்திருப்பேன். இந்த நிலையையும் என்னால் மறக்க முடியாது. ■



# நீத்தார் நினைவு

## நா.சோமகாந்தன்



04.12.1933 - 28.04.2006

■ எழுத்துலகில் 'ஈழத்துச் சோமு' என அறியப்பட்ட அமரர் நா. சோமகாந்தன் அவர்கள், யாழ்ப்பாணம் கரவெட்டிப் பகுதியிலுள்ள கரணவாய் எனும் ஊரைச் சேர்ந்தவர். 1950 இல் இலக்கியப் பிரவேசம் செய்த சோமகாந்தன் அவர்கள் ஆரம்பத்தில் 'கருணையூர்ச் சோமு' எனும் புனைபெயரிலேயே தனது ஆக்கங்களைப் படைத்தார். மட்டுமல்ல சோமகாந்தன், கலாமதி, புதுமைப்பிரியன், என்ற பெயர்களிலும் தொடக்க நாட்களில் எழுதியுள்ளார். ஆனால் 'ஈழத்துச் சோமு' என்ற புனைபெயரே அவருக்குப் பிடித்ததாயும் எழுத்துலகில் அதிகம் அறியப்பட்டதாயும் ஆகிவிட்டது. 'சுதந்திரன்' சிறுவர் பகுதியிலும், 'ஈழகேசரி' மாணவர் பகுதியிலும் இவரது ஆரம்பகால ஆக்கங்கள் களம் கண்டன 'கலைச்செல்வி'யும் இவரது ஆக்கங்களுக்குக் களம் கொடுத்தது.

■ இலங்கை முற்போக்கு எழுத்தாளர் சங்கத்தின் முக்கிய செயற்பாட்டாளர்களில் ஒருவராக விளங்கிய இவர் 1961இல் யாழ் நகரமண்டபத்தில் நடைபெற்ற இ.மு.எ.ச இன் இரண்டாவது மாநாட்டில் சங்கத்தின் தேசிய அமைப்பாளராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

■ சுமார் ஐம்பது வருடங்களாக சிறுகதை, நாவல், பத்தி எழுத்துக்கள், திறனாய்வுக்கட்டுரைகள், ஆன்மீகக்கட்டுரைகள் என இலக்கியத்தின் சகல பரிமாணங்களிலும் ஆக்கங்களைப் படைத்த இவர் இலக்கிய விழாக்கள், மாநாடுகள் பலவற்றின் அமைப்பாளராக திறமையோடு செயற்பட்டவர்.

■ இவரது தந்தையார் சமஸ்கிருத இலக்கியங்களிலும் தமிழிலுள்ள புராணங்களிலும் புலமைமிக்கவர். இளவயதில் தந்தையிடமிருந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவற்றைக் கேட்டறிந்ததாலும்; மாணவப்பருவத்தில் வாசிக்கக் கிடைத்த தி.மு.க ஏடுகள், சுதந்திரன் பத்திரிகை, மார்சிம் கோர்க்கியின் 'தாய்' நாவல், 'பாரதியார் பாடல்கள்', புதுமைப்பித்தனின் படைப்புக்கள் என்பவற்றாலும்; 'சமூகத்தொண்டன்' சிற்றேட்டின் ஆசிரியர் கவிஞர் விடிவெள்ளி க.பே.முத்தையா அளித்த தூண்டுதலினாலும், தெல்லிப்பழை மகாஜனாக் கல்லூரியில் உயர்வகுப்புப் படிக்கும் காலத்தில் கிடைக்கப்பெற்ற அதிபர் தெ.J.ஜெயரத்தினம், புலவர் சிவபாதசுந்தரனார், கவிஞர் கதிரேசர்பிள்ளை, கலையருவி க.சண்முகசுந்தரம் முதலிய இலக்கிய வாதிகளின் தொடர்புகளினாலும்; சுதந்திரன், ஈழகேசரி, தினகரன் ஆகிய பிரசுரங்களினாலும்; 1956 இல் கொழும்புக்கு வந்த பின்னர் முதுபெரும் பத்திரிகையாளர் எஸ்.டி.சிவநாயகம் அளித்த ஆதரவினாலும் தனது இலக்கியப்பயணம் விரிவடைந்தது என 'வீரகேசரி' 'தினகரன்' ஆகியவற்றிற்கு அவ்வப் போது அளித்த பேட்டிகளில் அவரே குறிப்பிட்டுள்ளார்.

- இவரது முதலாவது நூல் 'ஆகுதி' சிறுகதைத் தொகுதி 1965இல் வெளிவந்தது. மல்லிகை டொமினிக் ஜீவா இதனை வெளியிட்டார். 'விடிவெள்ளி பூத்தது' (நாவல்), 'தத்துவச் சித்திரம்' (ஒழுக்க விழுமியங்கள் பற்றிய கட்டுரைகள்), 'ஈழத்து இலக்கியம் - பல் துறை நோக்கு' (கட்டுரைகள்), 'நிலவோ நெருப்போ' (சிறுகதைத் தொகுப்பு), 'பொய்கை மலர்' (நல்லூர்க் கந்தசுவாமி கோவிலில் இருந்து கதிர்காமம் வரை பக்தர்கள் எவ்வாறு கால் நடையாக யாத்திரையை மேற்கொண்டார்கள் என்பதைச் சித்தரித்து நாவல் நடையில் எழுதப்பட்டது), 'ஈழத்தமிழருக்கு ஏன் இந்த வேட்கை' (வரலாறு, அரசியல் சார்ந்த நூல்), 'சிரிக்கும் கோடையில் சிலிர்க்கும் பனிநாடு' (கனடா பயண நூல்) என்பன இவரது ஏனைய நூல்களாகும்.

- இவை தவிர இவர் ஆசிரியராக இருந்து வெளியிடப்பெற்ற சிறப்பு மலர்கள், தொகுப்பு ஏடுகள் பல. (உ+ம்) ஆறுமுக நாவலர் மாநாட்டு மலர் (1969). தவிர பல இலக்கிய / சமய மன்றங்களில் முக்கியமான பொறுப்புக்களை வகித்துத் திறம்படச் செயலாற்றியுள்ளார்.
  (உ+ம்) அமைப்புச் செயலாளர் - நாவலர் சிலைநாட்டு விழா, நாவலர் மாநாடு, தேசபவனி (1969)



- தினகரன் வாரமஞ்சரியில் (1996/1997) 'காந்தளின் கண்ணோட்டம்' எனும் மகுடத்தில் இவர் எழுதிய 'பத்தி' எழுத்துக்கள் இவரது இலக்கிய தேடலுக்கும், இலக்கிய நண்பர்களது தொடர்பிற்கும் சான்று பகர்வன. இலங்கை வானொலியின் தமிழ்ச் சேவையில் இவர் ஆற்றிய வானொலிப்பேச்சுக்கள் ரசிகர் மத்தியில் பெரும் வரவேற்பைப் பெற்றவை. இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபன இந்து ஆலோசனைக் குழுவிலும் அங்கத்துவம் வகித்தவர். வரதர் வெளியிட்ட 'பல் குறிப்பு'- Directory in Tamil (1970/1971) என்ற 'டிரக்டரி' யின் இணையாசிரியராகவும் இருந்தவர். வரதர் நடத்திய 'புதினம்' வாரப்பத்திரிகையில் 'கன்னி நதி தீரத்திலே' எனும் தொடர் நாவலையும் எழுதியவர்.

- இலக்கியம், சமயம் சார்ந்த வெளிநாடுகளில் நடைபெற்ற பல விழாக்களிலும் மாநாடுகளிலும் பங்கு பற்றியவர், உரையாற்றியவர். (உ+ம்) சென்னையில் நடைபெற்ற அனைத்திந்திய எழுத்தாளர் மாநாடு (1990), பம்பாயில் நடைபெற்ற சின்மயா மிஷன் பொன் விழா (2000).


- இவரும் இவரது மனைவி திருமதி. பத்மா சோமகாந்தனும் சம காலத்தில் இலக்கியப் பிரவேசம் செய்தவர்கள். இலக்கியம் மூலமாக ஒருவரையொருவர் அறிந்து பின்னர் வாழ்வில் இணைந்து கொண்டவர்கள். திருமதி. பத்மா சோமகாந்தன் அவர்களும் இன்று தமிழுலகு அறிந்த பிரபல்யமான எழுத்தாளராகத் திகழ்கிறார். இலக்கியத்தை மட்டுமல்ல இலக்கியவாதிகளையும் மிகவாக நேசிப்பதிலும் வீட்டிற்கு அழைத்து விருந்தளித்து மகிழ்வதிலும் இவ்விலக்கியச் சோடி இணையற்றது.

- மல்லிகை 1989 ஏப்ரல் இதழில் இவருக்கு அட்டைப்படக் கௌரவம் அளித்தது. இவரைப்பற்றி பிரேம்ஜி அறிமுகக் குறிப்பு எழுதியிருந்தார். 1996 இல் இலக்கிய நண்பர்கள் 'சோமகாந்தம்' எனும் மணிவிழாமலர் (தொகுப்பாசிரியர்: பூ.ஸ்ரீதரசிங்) வெளியிட்டுச் சங்கை செய்தார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நினைவிடை தோய்தல்



மாஸ்டர் சிவலிங்கம் அவர்கள் (இரா.இரத்தின சிங்கம் சிவலிங்கம்) இலங்கையின் வில்லுப்பாட்டுக் கலையை அறிமுகம் செய்தவர். ஈழத்து வில்லிசையின் பிதாமகன் அவரே. கதை சொல்லும் கலை இவருக்குக் கைவந்த கலை. சுமார் 18 ஆண்டுகள் மட்டக்களப்பு மாநகர சபை பொது நூல் நிலையத்தில் கதை சொல்லும் கலைஞராகப் பணியாற்றியவர். இலங்கை கலைக் கழகத்தின் கலாபூஷண விருது (1999), வடக்கு-கிழக்கு மாகாண ஆளுநர் விருது (2000) கிழக்குப் பல்கலைக்கழகம் வழங்கிய இலக்கியக் கலாநிதிப் பட்டம் (2002) ஆகியவற்றைப் பெற்றவர். 1997 இல் இங்கிலாந்திலும் வில்லுப்பாட்டு நிகழ்ச்சி நடத்தியவர்.

## வில்லுப்பாட்டு விழாவிலே

நான் தமிழ் நாட்டிலே 1959இல் ஓவியக் கலை பயின்று கொண்டிருந்த காலத்திலே பல வில்லுப்பாட்டு நிகழ்ச்சிகளை பார்க்கும் வாய்ப்பு கிடைத்தது. வில்லுப்பாட்டுக் கலையிலே எனக்கு பெரும் ஈடுபாடு ஏற்பட்டது.


அடிக்கடி சில வில்லுப்பாட்டுக்களை மெதுவாகப் பாடிக்கொண்டேயிருப்பேன். அப்போதெல்லாம் நண்பர் இராஜபத்மநாதன் பாராட்டி உற்சாகம் ஊட்டுவார். நானும் அவரும் தமிழ் நாட்டின் தேனாம்பேட்டையில் ஒரு வீட்டில் தங்கியிருந்தோம்.

திரு.இராஜபத்மநாதன் தமிழகத்தில் ஒரு சினிமாக் கம்பெனியில் உதவி டைரக்டராகப் பணிபுரிந்துகொண்டிருந்தார். அந்தக் காலகட்டத்தில் கவிஞர் காசி ஆனந்தன் பச்சையப்பன் கல்லூரியிலே பி.ஏ. படித்துக் கொண்டிருந்தார். விடு நாட்களில் எங்களைச் சந்திக்க நாங்கள் தங்கியிருந்த வீட்டுக்கே வருவார். அப்போதெல்லாம் திரு.இரா. பத்மநாதன் எனது வில்லுப்பாட்டு ஆர்வத்தைப் பற்றி கவிஞர் காசி ஆனந்தனிடம் எடுத்துக் கூறுவார். அதைக் கேட்டு மகிழ்ச்சியுடன் என்னைப் பாராட்டி ஊக்கப்படுத்துவார் கவிஞர். "மாஸ்டர் நீங்கள் வில்லுப் பாட்டை ரசித்தால் மட்டும் போதாது. முறையாகக் கற்றுக்கொண்டு மட்டக்களப்பில் நீங்கள் இக் கலையை



அறிமுகப்படுத்தவேண்டும்". "இப்படி இராஜபத்மநாதனும், கவிஞர் காசி ஆனந்தனும் அடிக்கடி கூறி வந்தனர்.

அப்போது பிரபலமாக தமிழகத்தில் இருந்த வில்லிசைக் கலைஞர் திருப்பார்த்தசாரதி அவர்களிடம் வில்லுப்பாட்டு நுணுக்கங்களைப் பயின்று கொண்டேன். எனது வில்லுப்பாட்டு ஆர்வத்தை அவதானித்த திருப்பார்த்தசாரதி அவர்களும் என்னை வெகுவாகப் பாராட்டி ஆசியும் வழங்கினார்.



1960ம் ஆண்டு இலங்கை திரும்பிய நான், இசையார்வம் மிக்க சில இளைஞர்களைச் சேர்த்து அவர்களுக்கு வில்லுப்பாட்டுப் பயிற்சியளித்தேன். அதையடுத்து, "மட்டக்களப்பு மாஸ்டர் சிவலிங்கம் வில்லுப்பாட்டுக் குழு" என்ற பெயரில் ஒரு குழு அமைக்கப்பட்டது.

எமது குழுவின் முதலாவது வில்லுப்பாட்டு மட்டக்களப்பு கல்லடி – உப்போடை ஸ்ரீ சித்தி விநாயகர் ஆலய வருடாந்தத் திருவிழா வைபவத்தில் 1961ம் ஆண்டு நடைபெற்றது. "நமக்கு மேலே ஒருவனடா" என்ற பக்திச் சுவையும், நகைச்சுவையும் நிறைந்த அந்த வில்லுப்பாட்டு, ஆலயத்திற்கு வந்திருந்த அனைவரின் உள்ளங்களையும் கவர்ந்தது. சிரித்து மகிழ்ந்து, கரகோஷம்செய்து பாராட்டினர். வில்லிலே அடித்துக் கொண்டு பாடிக் கதை கூறிய நிகழ்ச்சியை ஆர்வத்தோடும், ஆச்சரியத்தோடும் பார்த்து ரசித்தனர்.

நிகழ்ச்சி முடிந்ததும் ரசிகர் கூட்டம் மேடையைச் சூழ்ந்துகொண்டது. முண்டியடித்துக்கொண்டு எம்மைப் பாராட்டி மகிழ்ந்தனர். அதையடுத்து பல விழாக்களிலே எமது வில்லுப்பாட்டு நிகழ்ச்சி நடைபெற்றது. இலங்கையின் பல பாகங்களிலும் எமது வில்லுப்பாட்டு நிகழ்ச்சிகள் நடைபெற்றன. மொத்தமாக 127 மேடைகளில் எமது வில்லுப்பாட்டு நிகழ்ச்சி நடைபெற்றது.

எமது வில்லிசைக் குழுவிலே முழக்கம் முருகப்பா, கவிஞர் குணரெத்தினம், வீ.கதிர்காமத்தம்பி, வி.தட்சணாமூர்த்தி, கோபாலகரன், ஆர்.டி.கிருஷ்ணராஜேஸ்வரம், சக்திதாசன், அன்புமணி இரா.நாகலிங்கம் முதலியோர் இடம்பெற்றிருந்தனர். எமது வில்லுப்பாட்டுக் குழுவின் நூறாவது வில்லுப்பாட்டுப் பூர்த்தி விழாவை பல சங்கங்கள் ஒன்றிணைந்து மட்டக்களப்பு நகர மண்டபத்திலே கோலாகலமாக நடத்தியமை இங்கு குறிப்பிடத்தக்கது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எமது குழுவின் 25வது வெள்ளிவிழாப் பூர்த்தி விழாவில் தான் தலைகுனிந்தது. பின்னர் நடைபெற்ற சம்பவம் ஒன்று எனது ஞாபகத்துக்கு வருகின்றது.

எமது குழு இருபத்தைந்து வெள்ளிவிழா நிகழ்ச்சிகளை மிகக் குறுகிய காலத்துக்குள் நடத்தி முடித்தமையைப் பாராட்டும் முகமாக சில பிரமுகர்கள் ஒன்றிணைந்து ஒரு விழாவை ஏற்பாடு செய்திருந்தனர். அந்தப் பாராட்டு விழாவை அராலி வித்தியாலயத்திலே (தற்போதைய மகாஜனாக் கல்லூரி) ஏற்பாடு செய்திருந்தனர். விழாவுக்கு மட்டக்களப்பு மாவட்ட நீதிபதி திரு.எஸ்.தம்பித்துரை அவர்கள் தலைமை வகித்தார். பல பிரமுகர்கள் விழாவில் கலந்துகொண்டனர்.

பேச்சாளர்களுள் ஒருவராகக் கலந்து கொண்ட கூட்டுறவு வங்கி உதவி முகாமையாளர் திரு.ம.த. லோறன்ஸ் பின்வருமாறு கூறினார்:

"மாஸ்டர் சிவலிங்கமும் நானும் சிவானந்தா வித்தியாலயத்தில் ஒன்றாகப்படித்தவர்கள். மாஸ்டருக்கு இறைவன் நல்ல ஆற்றலை வழங்கியுள்ளார். ஒரு கதைப்புத்தகத்தை மாஸ்டர் என்னிடம் தந்து வரிக்கு வரி கவனமாகப் பார்க்கும் படி கூறிவிட்டு கண்ணை மூடிக்கொண்டு புத்தகத்திலுள்ள கதையை தவறில்லாமல் வரிக்கு வரி அப்படியே கூறுவார்.

அந்த ஆற்றலை மாஸ்டர் கல்வியிலே மட்டும் செலுத்தியிருந்தால் என்னைப் போலவே அவரும் ஒரு அதிகாரியாகவோ, பாடசாலை அதிபராகவோ பணிபுரிந்திருப்பார். ஆனால் சிறுவயதிலேயே மாஸ்டர் நாடகம், நாட்டுக்கூத்து, பாட்டு முதலியவற்றில் ஆர்வம் கொண்டிருந்ததால் அவர் உயர்ந்த உத்தியோகத்தராக வரமுடியாமல் போய் விட்டது."

இப்படி திரு.லோறன்ஸ் கூறியதும் சபையிலுள்ள பலர் என்னை அனுதாபத்தோடு பார்த்தனர். வேதனையிலே எனது தலை கவிழ்ந்தது. கண்களும் கலங்கின.

திரு. லோறன்ஸ் பேசி முடித்ததும், மாவட்ட நீதிபதி திரு. தம்பித்துரை அவர்கள் மெதுவாக எழுந்தார்.

"திரு.லோறன்ஸ், கலைஞன் மாஸ்டர் சிவலிங்கத்தைப் பற்றிக் கூறியதை என்னால் ஏற்றுக் கொள்ள முடியவில்லை. மாஸ்டர் சிவலிங்கம் கல்வியிலே மட்டும் கவனம் செலுத்தியிருந்தால் ஏதாவது ஒரு கந்தோரிலே ஒரு அதிகாரியாக, பெரும்பாலாருக்குத் தெரியாதவராக இருந்திருப்பார். கலைத்துறையில் ஈடுபட்டு அவர் கலைஞனாக விளங்குவதனாலே தான் அதிகாரிகள் பலர் இணைந்து அவருக்கு பாராட்டு விழா நடத்துகிறார்கள். மாவட்ட நீதிபதியாகிய நான் இவ் விழாவிலே அவரைப் பாராட்டுவதற்கு எந்த காரணம், அவர் ஒரு கலைஞர் என்பதாலே தான் அவருடைய கலைச் சேவை தொடர வாழ்த்துகிறேன்" என்றார் நீதிபதி. அவருடைய பேச்சை அடுத்து எனது தலை மகிழ்ச்சியோடு நிமிர்ந்தது.

■ மாஸ்டர் சிவலிங்கம்









இப்பகுதி இளையோருக்கானது. ஆக்கங்களை அனுப்ப வேண்டிய முகவரி: இளங்கதிர், மேய்ப்ப 'செங்கதிர்' ஆசிரியர், இல.19, மேல்மாடி வீதி, மட்டக்களப்பு.

## புதுமுக அறிமுகம்



வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரியில் (ஆரம்பப் பிரிவு - 2ம் வருடம்) ஆசிரிய மாணவியான செல்வி.சு.தர்ஷிகா அவர்கள் தன்னுடைய கவிதை நறுக்குகள் மூலம் அறிமுகமாகிறார்.

### உறுதி

சுடலையில் மலர்ந்து
சிரிக்கும் பட்டிப்பூக்கள்
நாம் - நிறையவே
வலிமையுண்டு
கொண்டு வாருங்கள்
உங்கள் விலங்குகளை!

### விடியல்

ஒரு சூரிய வம்சம்
மெதுவாக கருக(த்)
தொடங்கியிருக்கிறது.
அதனால் எங்கள்
ஒவ்வொரு
விடியலும்
இரவுகளை நாட்களே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**கல்வி**

நாங்கள் அகரங்கள் தொட்டு
எண்ணாக்கைகள் வரை
கற்றது
உங்கள் சிறைகளில்
அதுனாய் - காதலாய்
இருக்கிறோம்
எங்கள் பள்ளிகளை
சிறைமத்துக் கொள்ள!

**வளர்ச்சி**

எங்கள் புதினங்கள்
இப்போது
தலைக்கூடில் பேசுகிறது!
உங்கள் மனங்களுக்
குறுங்களைதில்!

க. தர்ஷிகா
[redacted]

# இப்படியும் சாதனையா?

■ ஸ்கேட்டிங் எனும் சறுக்கு ஓட்டத்தின் மூலம் 200 கி.மீற்றர் தூரத்தை 24 மணித்தியாலத்தில் கடந்து சிறுமி ஒருவர் சாதனை படைத்துள்ளார். புதுச்சேரி உப்பளத்தைச் சேர்ந்த சுருதி (வயது 7) என்பவரே இச்சாதனையைப் படைத்துள்ளார். பாகிஸ்தானில் தூக்குத் தண்டனை விதிக்கப்பட்டுள்ள இந்தியரான சரப்ஜித் சிங்கை மனிதாபிமான அடிப்படையில் விடுதலை செய்ய வேண்டுமென வலியுறுத்தியே இப்பயணம் மேற் கொள்ளப்பட்டது. 29.03.2008 அன்று பத்து கண்ணுவில் ஆரம்பித்த இப் பயணம் புதுச்சேரி நகரம், கரலாட்பட்டு மரக்காணம் வழியாக மாமல்லபுரம் சென்று பின்னர் அதே வழியாக புதுச்சேரிக்கு திரும்பியதுடன் நிறைவு பெற்றது.

■ கைகளற்ற சிறுமி ஒருவர் கயிறேற்றப் போட்டிகளில் கலந்து கொண்டு சிறப்பிக்கும் நிகழ்ச்சி ஒன்று இடம் பெற்று வருகிறது. இந்தியாவின் அரியானா மாநிலத்தைச் சேர்ந்த கமன் ஜஸ்பால் (வயது 12) என்ற சிறுமியே இச்சாதனையை செய்துவருகிறார். விபத்தொன்றில் சிக்கிய மேற்படி பெண்ணின் இரு கைகளும் முழங்கை வரை துண்டிக்கப்பட்டன. இதனால் பெற்றோர்கள் மனவருத்தமடைந்தனர். எனினும் படிப்பிலும் விளையாட்டிலும் கட்டுத்தனமான கமன் தனது இரு கைகளிடையே தூரிகையை பிடித்து வரைய ஆரம்பித்தார். காலப்போக்கில் ஓவியம் அவளுக்கு கைவந்த கலையாகியது. இதனையடுத்து கையற்ற இரு கைகள், கால்களைப் பயன்படுத்தி கயிறேறும் பயிற்சிகளில் ஈடுபட்டு வந்தார். தற்போது பாடசாலை கயிறேற்றப் போட்டி களில் முன்னணியில் திகழ்வதாகவும் கூறப்படுகிறது. மேலும் ஓவியம் வரைதல் மற்றும் கயிறேற்றப் போட்டிகளில் நான்தான் முன்னணி வகிப்பேன் என இவர் கூறிவருவதாக தெரிவிக்கப் படுகிறது.

நன்றி : வீரகேசரி 01.04.2008

# கவிஞர் ஏழுநிலா பற்றிய அறிமுகக் குறிப்புகள்



இலங்கை, கிழக்கு மாகாணம், அம்பாறை மாவட்டம், பொத்துவில் தேர்தல் தொகுதியில், பொத்துவில் பிரதேசத்தை பிறப்பிடமாகவும், கொழும்பை வசிப்பிடமாகவும் கொண்ட கவிஞர் ஏழுநிலா 1983.05.02 இல் பிறந்தவர். ஈழத்தில் மரபுக் கவிதை எழுதிவரும் இளம் கவிஞர்களுள் மிக முக்கியமானவர். பொத்துவில் மத்திய கல்லூரியின் பழைய மாணவராகவும், இலங்கை அஸ்ரப் கலை இலக்கிய பேரவையின் தலைவராகவும் இருக்கும் இவர் ஒரு தசாப்த காலமாக எழுத்து இலக்கியத்துக்கு தன் படைப்புக்கள் மூலம் பங்களிப்புச் செய்து வருகிறார். இவரது 200க்கும் மேற்பட்ட கவிதை, சிறுகதை, பத்தி எழுத்துக்கள் இலங்கை யின் தேசிய பத்திரிகைகள் சஞ்சிகைகளி லும், இணைய சஞ்சிகைகளிலும் ஏழுநிலா, பொத்துவில் அஸ்மின் உதுமாலெவ்வை, பொத்துவிலூர் அஸ்மின், யு.எல்.எம். அஸ்மினா எனும் பெயர்களில் பிரசுரம் பெற்றுள்ளன. "விடைதேடும் வினாக்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கள்" (2006), "வியாபாரிகள்" (2002) ஆகும் மட்டத்தில் இதுவரை இரண்டு கவிதை நூல்களை வெளியிட்டுள்ளார்.

'ஈழநிலாவின் கவிதைகள்', ஈழத்து கவிஞர்கள் பற்றி 'சுடர் ஒளி' வார வெளியீட்டில் இவர் எழுதிவரும் 'ஈழநிலாவின் உணர்வுகள்' பத்தி எழுத்துக்கள் பாகம் ஒன்றும் மிக விரைவில் நூலாக வெளிவரவிருக்கிறது. தற்போது சுடர் ஒளி பத்திரிகையின் உதவி ஆசிரியராகவும், டான் டீவியின் பகுதி நேர அறிவிப்பாளர்களாகவும் கடமைபுரியும் இவர் 'டான்' டீவியில் 'சூரிய விரல்கள்' என்ற இலக்கிய நிகழ்ச்சி தயாரித்து வழங்குவதோடு 'சுடர் ஒளி' வார வெளியீட்டின் கவிதைப்புனல் தயாரிப்பாளராகவும் இருந்து வருகின்றார்.

சக்தி டீவியின் இசை இளவரசர்கள் போட்டியில் 7000 போட்டியாளர்களுக்குள் தேர்வான 16 பாடலாசிரியர்களுள் இவரும் ஒருவர். வலய தேசிய மட்ட கவிதைப் போட்டிகளில் கலந்து கொண்டு ஜனாதிபதி விருது (2001) பேராதனை பல்கலைக் கழகத்தின் தங்கப் பதக்கம் (2003) உட்பட ஏழு விருதுகளை பெற்றுள்ளார். என்பதும் குறிப்பிடத்தக்கது.

# கவிஞர் ஈழநிலா (இலங்கை) கவிதைகள்!

## விருதுகள் வாங்கும் எருதுகள்......

எருதுகளுக்கு
விருதுகள் வழங்க
மாடுகள் கூட்டிய
மாநாடு அது....

நடப்பன ஊர்வன
நுழைப்பன பறப்பன
விலங்குகள் சிலவும்
விழாவுக்கு வந்தன....

காளைகளை
களவாக மேய்வதில்
கலாநிதி முடித்த
கிழட்டுக் கிடாக்கள் தான்
கிரீடத்தை சூட்டுகின்றன....

இலவம் பழுத்துக்காய்
இலவு காத்த
மூளையே இல்லாத
முட்டாள் கிளிகள்
கீச்சுக் குரலில்
மூச்சு விடாமல்
சிறு நீரை பற்றி
சிலாகித்துப் பேசின....

தீனி வாங்கியவை
எலி வாங்கி
எருமைகள் பற்றியே
எடுத்து விட்டன....
பாவம் பசுக்கள்.....!
பாலைப் பகிர்ந்தும்
பருகக் கொடுத்து விட்டு
குட்டிகளோடு
குமுறிக் கொண்டிருந்தன
குளக்கரையில்

பசுக்களை
கொசுக்கள் கூட
கணக்கில் எடுக்கவில்லை......

பாம்புகள்
பாலுக்காய்
படம்பிடிப்பிலிருந்தன.....
வெட்கமில்லாத
வெளவால்கள்
முலைகளை
மூடி மறைக்காததால்
முள்ளம் பன்றிகள் பார்த்து
மூச்சிரைத்தன......
பார்த்த மிடமெங்கும் பாலே ஓடியது......

பூனைகள் எலிகளோடு
புன்னகைத்தவாறு
முயல்களை
முழுங்குவது போல் பார்ப்பதில்
மும்முரமாய் இருந்தன.....
எருதுகளுக்கு
விருதுகள் வழங்க
மாடுகள் கூட்டிய
மாநாடு அது.....

வாழ்த்துப் பாடின
வால் பிடித்தே
வயிறு வளர்க்கும்
வானரத் தலைவர்கள்.....
கால் பிடித்தே
காரியம் முடிக்கும்
காகங்களும்
கழிசடைக் கழுதைகளும்
காளைகளுக்கு மாறி மாறி
கவரி வீசின....

மாக்கள் கூடிய
மாநாடு அல்லவா....?
பூக்களுக் கங்கே
புகழாரமில்லை

அழுக்குத்தான் அன்று
அரியணையில் இருந்ததால்
சாணமே அங்கு
சந்தனமாய் இருந்தது......





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தயிர்ச் சட்டிகளாலும்
வெறும் முட்டிகளாலும்
இவ் வருடத்திற்கான விருதுகள்
இறைக்கப்பட்டிருப்பதாகவும்
பருந்துகளுக்கு
விருந்து வழங்கினால்தான்
அடுத்த வருடத்திற்கான
ஆளுநர் தெரிவாவாரென்றும்
அதிலும்
முதுகு சொறிவதில்
முறைமாறி முடித்தவர்களுக்கே
முன்னுரிமை இருப்பதாகவும்
முதலைகள்
முறை முறைத்தன....

எருதுகளுக்கு
விருதுகள் வழங்க
மாடுகள் கூட்டிய
மாநாடு அது...

நாக்கிலுப்புறும் ஒன்றே
நடுவராக இருந்ததால்
மான்களுக்கும்
மயில்களுக்கும்
மரியாதை அங்கில்லை
வான் கோழிகளுக்குத்தான்
வரவேற்பிருந்தது.
பரிகளும் வரவில்லை
நரிகளும்
நாய்களுமே
நாற்காலியை நிறைத்திருந்தது.

மாநாட்டின் ஈற்றில்
எருமைகள் பற்றி
பெருமையாய்
சாக்கடை ஈக்கள்
சங்கீதமிசைத்தன.....

மரம் விட்டு
மரம்தாவும்
மந்தி
மந்திரிகள்
கையடித்தன
கைகொடு கொடுத்தன
எதுவுமே தெரியாத
எருமைகளுக்கு
பன்னாடைகளால்
பொன்னாடை போர்த்தி
போற்றிப் வழங்கின.....
மாடுகளின் மாநாட்டில்
விருதுகள் பெற்ற
எருதுகளின்
வீர பிரதாபங்களும்
பல்லிளிப்புடன் கூடிய
படங்களும்
விளம்பரமாய்
நாளை வரலாம்
நாய்களின் பத்திரிகையில். !!



## மாட்டுக்கு மாலை போடு......

காலினைப் பிடித்தேன் என்றான்
கழுத்துக்கு மாலை வேண்டாம் !

எழுத்திலே காணின் ஏதும்
எழுதுவீர் அதுவே போதும் !

வாலினைப் பிடிப்ப வர்தான்
வாழுவர் தெரியும் கெட்ட

தோளினை பிடித்தோர் கூட
தேம்புவர் எனவே உங்கள்

காலினைப் பிடித்தே னையா
கழுத்துக்கு மாலை வேண்டாம் !

கழுதையும் குரங்கும் மாடும்
கழுத்திலே மாலை பூண்டு...

பூனைக்கு பூனை கூடி
முதுகினை சொறிந்து எங்கும்

போட்டோக்கு பல்லைக் காட்டி
போஸினை கொடுத்து பின்னர்

எங்களை வெல்லும் கொம்பன்
எவனடா இங்கு உண்டு.....?

என்றுதம் புகழ்ச்சி தன்னில்
எம்பித்தான் குதிக்கும் போது

அற்பன்தான் அவைகள் பாத
அடியிற்கு இன்னும் கீழே

ஆசையால் மாலை வாங்க
அடியேனுக் காசை யில்லை

காலினைப் பிடித்தேன் வாப்பா
கழுத்துக்கு மாலை வேண்டாம் !

மாண்டு நாம் மடிந்த பின்தான்
மனதினால் மாலை இடுவர்

சண்டியர் போடும் மாலை
இதயத்த லல்ல வேஷம்..

மாலையில் மாலை போட்டு
மாலைதான் மறையுமுன்னே

கூழையன் நாங்கள் போட்ட
கூழுக்கு ஆடிப் போனான்

ஆளினைப் பிடித்து வைத்தால்
ஆனையாம் என்பீர் உங்கள்

காலினைப் பிடித்தேன் வாப்பா
கழுத்துக்கு மாலை வேண்டாம் !

எலும்புக்காய் எச்சிலைக்காய்
எங்கள்நாய் வாலை ஆட்டும்

பிணமான பின்தான் உண்மை
பிரியத்தை அதுவும் காட்டும்

ஆசையால் மாலை சூட்ட
ஆருமே வராதீர் தேடி !

எழுத்திலே ஏதும் காணின்
எழுதுவீர் அதுவே கோடி !!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செங்கதிரோன் எழுதும்



# விளைச்சல்

## குறுங்காவியம்

(கவிஞர் நீலாவணனின் 'வேளாண்மை' க் காவியத்தின் தொடர்ச்சி...)

**அன்னம்மா முறைமச்சான் செல்லனுடனான**
**தன் பழைய நினைவுகளை மீட்டுகிறாள்**

சற்றுமுனைப் பள்ளி செல்லக்
காத்தவன் நின்றபோது
மெல்லிசாய் "அன்னம்.....!" என்று
மிதிவண்டி வீதில் வந்து
மெல்லியே அழைத்து அன்று
சொந்தத்தைத் தூக்கிவைத்த
செல்லனை எண்ணிப்பார்த்தாள்.
சிறுநகை இதழ்கள் சிந்தும்!

"கத்தரிக்காய் ஆயக்
காலைக்குள் நின்ற வேளை
எத்தனை தரம்தான் அந்த
இடத்திற்கு வந்து போனாய்....?

சத்தியம் அத்தான்! உன்னைச்
சந்திக்க ஆசை. ஆனால்.....
உத்தமம் இல்லை. நானே
ஊர் வாயை ஆடலாமோ?

மாலைக்குள் மறைப்பில் நின்று
மருகுவாய் ஒழுங்கைக்குள்ளே!
காலைக்குள் கையைக்காட்டிக்
காண்பித்து 'வா! வா! என்பாய்!
நாளைக்கு வாவன் என்று
நாளும் நான் அனுப்பி வைத்து
தாலிக்கு நாளைப்பார்த்துத்
தவித்தாளே! இந்த அன்னம்.

ஊர் எல்லாம் உறங்கும் நேரம்
உனைக்காணவென்றே ஓர் நாள்
பார்வதிப் பெத்தாவோடு
* 'பள்ளயம்' பார்க்கப்போன
நேரத்தில் நீயும் அத்தான்!
நிழல் போலப் பின்னே வந்தாய்!
ஊர்வம்பு சொல்லுமென்றே
உன்னோடு பேசவில்லை"

பின்னாலே செல்லன் வந்து
பேசாமல் கையைப் பற்ற
"என்னத்தான்!" என்றாள் அன்னம்.
"இஞ்ச பார்!" என்று சொல்லி
அன்னத்தின் கையைப் பொத்தி
அழுக்கினான் காப்புச் சோடி.
அந்நாளை எண்ணி நெஞ்சில்
அன்னம்மா ஆனந்தித்தாள்.

*பாண்டிருப்பு (கல்முனை) திரௌபதை அம்மன் கோவில் வருடாந்த (தீ மிதிப்பு) உற்சவம் தீப்பள்ளயம் என அழைக்கப்படும்.

– இன்னும் விளையும் –





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புதுமைப்பித்தன் (சொ.விருத்தாசலம்) 1906-1948



-ந. பார்த்திபன்-

இலக்கியத்தில் இன்னதுதான் சொல்ல வேண்டும், இன்னது சொல்லக் கூடாது என ஒரு தத்துவம் இருப்பதாகவும் அதை ஆதரித்துப் பேசுவதாகவும் மனப்பால் குடித்துக் கொண்டிருக்கலாம். உண்மை அதுவல்ல. சுமார் 200 வருஷங்களாக ஒருவிதமான சிறைப்பட்ட வாழ்வு நடத்திவிட்டோம். சில விஷயங்களை நேர் நோக்கில் பார்க்கவும் கூசுகிறோம். அதனால்தான் இப்படிச் சக்கர வட்டமாகச் சுற்றி வளைத்துச் சப்பைக் கட்டு கட்டுகிறோம். குரூரமே அவதாரமான ராவணனையும், ரத்தக்களறியையும், மனக்குரூரங்களையும் விகற்பங்களையும் உண்டாக்க இடமிருக்குமேயானால், ஏழை விபச்சாரியின் ஜீவனோபாயத்தை வர்ணிப்பதானா சமூகத்தின் தெம்பு இற்றுப் போகப்போகிறது? இற்றுப் போனது எப்படிப் பார்த்தாலும் நிற்கப் போகிறதா? மேலும் இலக்கியம் என்பது மன ஆவேசத்தின் எழுச்சி தானே. நாலு திசையிலும் ஸ்டோர் குமாஸ்தா ராமன், சினிமா நடிகை சீதாம்பாள், பேரம் பேசும் பிரமுகாபகம்- இத்யாதி நபர்களை நான் தவறாமல் பார்த்துக்கொண்டு இருந்து விட்டு, இவர்களது வாழ்வுக்கு இடம் அளிக்காமல், காகம் கத்தரிக்காய் பண்ணிக்கொண்டிருப்பது போன்று அனுபவத்திற்கு நேர் முரணான விவகாரம் வேறு ஒன்றுமில்லை. நடைமுறை விவகாரங்களைப் பற்றி எழுதுவதில் கௌரவக் குறைச்சல் எதுவுமில்லை. (1945ல் புதுமைப்பித்தன் கட்டுரைகள்)

இறவாத 97 சிறுகதைகளும், 'சிற்றன்னை' என்ற குறுநாவலும், 'அன்னை இட்ட தீ' என்ற முற்றுப் பெறாத நாவலும் எழுதியவர் புதுமைப்பித்தன். சில கவிதைகளும் கட்டுரைகளும் கூட எழுதியிருக்கிறார்.



எனினும் சிறுகதையில் தனித்துவம் பெற்றவராகத் திகழ்கிறார். புதுமைப்பித்தன் கதைகள் தொகுப்பிற்கு 1940ல் முன்னுரை எழுதிய ரா.ஸ்ரீ.தேசிகன் "சிறுகதை மர்மங்களை நன்கு அறிந்துள்ள புதுமைப்பித்தனின் கதைகளுக்கிடையே திரியும் போது ஒரு கவி உலகில் திரிகிற உணர்ச்சி எனக்கு வருகிறது. இவருடைய கதை ஒவ்வொன்றும் ஒரு தனி அனுபவ முத்திரை பெற்றிருக்கிறது. ஒவ்வொவ்வொன்றிலும் உண்மையின் நாதம் ஒலிக்கிறது..... ஒரு கவி உள்ளம், சோகத்தினால் சாம்பிய கவி உள்ளம், வாழ்க்கை முட்களில் விழுந்து ரத்தம் கட்டுகிற உள்ளம் கதையின் மூலம் பேசுகிறது" என்று குறிப்பிடுகிறார். ரா.ஸ்ரீ.தேசிகனின் கூற்றை எழுத்தாளர் சுந்தரராமசாமி "பொய்யான மிகையான முன்னுரைகளைத் தாங்கி வரும் புத்தகங்களையே இன்று வரையிலும் நாம் அதிகளவில் பார்த்துக் கொண்டு வருகிறோம். ஒரு படைப்பை மதிப்பிட முயலும் முன்னுரைகள் கூட மிகக் குறைவு. இந்நிலையில் 80 வருடங்களுக்கு முன் புதுமைப்பித்தன் கதைகள் மீது விமர்சனப் பார்வையை செலுத்த முயன்ற ஒரு முன்னுரையை தந்ததுடன் அவர் பயன்படுத்திய பல சொற்கள் இன்றும் பொருள் செறிவுடன் விளங்குகின்றன" என 2000ல் குறிப்பிடுகிறார். இவை புதுமைப்பித்தனின் சிறப்பை எடுத்து காட்டுகின்றன.

தன்னுடைய கதைகளைப் பற்றி புதுமைப்பித்தன் கூறியவற்றைப் பார்ப்போம். "பொதுவாக என்னுடைய கதைகள் உலகத்திற்கு உபதேசம் பண்ணி உய்விக்க ஏற்பாடு செய்யும் ஸ்தாபனம் அல்ல, பிற்கால நல்வாழ்வுக்குச் சௌகரியம் பண்ணி வைக்கும் இன்ஷ்யூரன்ஸ் ஏற்பாடும் அல்ல. எனக்குப் பிடிக்கிறவர்களையும், பிடிக்காதவர்களையும் கிண்டல் செய்து கொண்டிருக்கிறேன். சிலர் என்னோடு சேர்ந்து கொண்டு சிரிக்கிறார்கள், இன்னும் சிலர் கோபிக்கிறார்கள். இவர்கள் கோபிக்க கோபிக்கத் தான் அவர்களை இன்னும் கோபிக்க வைத்து முகம் சிவப்பதைப் பார்க்க வேண்டும் என்று ஆசையாக இருக்கிறது. ஆனால் இப்படி கோபிப்பவர்களின் கூட்டம் குறைய குறையத்தான் எனக்கு கவலை அதிகமாகி வருகிறது. மேலும் என் கதைகளின் "பொதுத் தன்மை நம்பிக்கை வறட்சி" என்றும் கூறுகின்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எழுத்தாளர் வல்லிக்கண்ணன் 1995ல் "சிந்தனை ஆழம் நிறைந்த எழுத்து, படிப்பவர்களின் சிந்தனைக்கு வேலை கொடுக்கும் எழுத்து. நினைவுகளை வளர்த்து கதையைப் பின்னுகிற உத்தியைக் கையாண்ட புதுமைப்பித்தன் நடைபோட்ட முறையைக் (Stream of Consciousness) கையாண்டும் சில கதைகளை எழுதியிருக்கிறார். நடை வேகம், பரிசோதனை ரீதியான எழுத்து என்பன புதுமைப் பித்தனிடம் அதிகமாகக் காணப்பட்டன. தேர்ந்துகொண்ட விஷயத்திற்கு ஏற்றபடி, கதையை எப்படிச் சொல்ல வேண்டுமென்றும், தான் உணர்த்த விரும்புகிற உணர்வு அழுத்தத்தை படிக்கிறவர் மனதில் எவ்வாறு உண்டாக்குவது என்றும் நன்கு அறிந்து வைத்திருந்த சிறந்த சிறுகதை ஆசிரியர் புதுமைப்பித்தன். தமிழ்ச் சிறுகதைத் துறையில் பெரியதொரு புரட்சியை உண்டாக்கியவர். புதுமை வேகம், வாழ்க்கை பற்றிய கூர்மையான பார்வை, ஒப்பற்ற சிந்தனை நுட்பம், பாத்திரப்படைப்பு, கதை மாந்தரின் மனநிலைச் சித்தரிப்பு, தனது எண்ணங்களை அழுத்தமாகவும் புதிய முறையில் நயமாகவும் கூறும் துணிச்சல், அபாரமான தன்னம்பிக்கை, தேர்ந்தெடுக்க கதைப்பொருள்கள். அவற்றுக்கு கலை வடிவம் கொடுத்த நேர்த்தி, ஈடு இணையில்லாத எழுத்தாற்றல், கையாண்ட நடை இவை காரணமாக அவரது கதைகள் தனித்தன்மையோடு விளங்கலாயின" என்று சிறப்பித்துக் கூறுகிறார்.

இன்று பிரபல்யமாக இருக்கின்ற எழுத்தாளர்கள் எல்லோரும் புதுமைப் பித்தன் கதையைப் படித்துப் பரிச்சயம் பெற்றவர்கள்தான். சிறுகதையின் முன்னணியில் திகழ்கின்ற கு.ப.ராஜகோபாலன், மௌனி, லா.ச.ராமாமிர்தம் போன்றோரைப் படித்து பரிச்சயப்படுத்தி அந்த எழுத்து நடையைப் பின்பற்றி எழுதுபவர்களுக்கும் புதுமைப்பித்தனின் எழுத்து நடையைப் பின்பற்ற முடியாததாகியது. இவ்விடத்தில் புதுமைப்பித்தனின் கூற்று- "கருத்தின் வேகத்தையே பிரதானமாகக் கொண்டு வார்த்தை களை வெறும் தொடர்பு சாதனமாக மட்டும் கொண்டு தாவித் தாவிச் செல்லும் நடை ஒன்றை அமைத்தேன். அது தமிழ்ப் பண்பிற்கு முற்றிலும் புதிது. இதனால் பலர் நான் என்ன எழுதுகிறேன் என்பது பற்றிக் குழம்பினார்கள். சிலர் நீங்கள் எழுதுவது பொது ஜனங்களுக்குப் புரியாது என்று சொல்லி அனுதாபப்பட்டார்கள்.

அந்த முறையை நானும் சிறிது காலத்திற்குப் பின் கைவிட்டுவிட்டேன். காரணம், அது சௌகரியக் குறைபாடுள்ள ஒரு சாதனம் என்பதற்காக அல்ல. எனக்குப் பல முறைகளில் கதையைப் பின்னிப்பார்க்க வேண்டும் என்ற ஆசையினால் அதைக்கைவிட்டு வேறு வழிகளைப் பின் பற்றினேன்" கருத்திற் கொள்ள வேண்டியது; ஒரு தவளைப் பாய்ச்சல் நடை இவருக்குரியது.

சிறுகதையில் இவர் விதம் விதமான சோதனைகளைச் செய்து வெற்றி கண்டவர். வாழ்க்கையை விசாலப் பார்வையோடு நோக்கி, பரந்த அளவில் ரகம் ரகமான பாத்திரங்களையும் கதைப் பொருள்களையும் கையாண்டு மிக அருமையாக படைத்திருப்பதில் இவருக்கு நிகரானவர் எவருமில்லர். சமுதாயத்தில் அவலங்களை முதன் முதலாகக் கண்ட ஒரு கலை உள்ளத்தின் வேதனைகளாக இவர் கதைகள் பல அமைந்திருக்கின்றன. மனிதரின் சிறுமைகளையும் வக்கிரங்களையும் வாழ்க்கை முரண்பாடுகளையும் கண்டு பரிகசிக்கிற, கிண்டல் பண்ணுகிற மனதின் குரல்களாக அநேக கதைகள் காணப்படுகின்றன. ஒரு தனிச்சம்பவம் அல்லது உணர்ச்சி அல்லது குணாதிசயம் அல்லது வர்ணனை எடுத்தாளப்படும். லிரிக் (Liric) என்கின்ற கவிதைப்பகுதி போல் சிறுகதை. "சிறுகதையில் ரூபம் கதை எழுதுபவனின் மனோதர்மத்தைப் பொறுத்தது" என்று கூறும் புதுமைப்பித்தன், தனிப்பாடல் போன்று லிரிக் ரீதியில் அநேகம் கதைகளை எழுதியுள்ளார். அவற்றுக்கென சிறு சிறு வாக்கியங்களைக் கொண்ட தனி நடையொன்றும் அவர் கையாண்டார்.

புதுமைப்பித்தன் கதைகள் பற்றி விமர்சகர் சி.சு.செல்லப்பா "இவரது அத்தனை கதைகளிலும் புதுமைப்பித்தனின் மனோதர்ம வீச்சு, ஒரு சிருஷ்டி கர்த்தா தான் உயிர் கொடுத்து சிருஷ்டிப்பதற்கு உபயோகிக்க முடிந்த தன் அனுபவ அம்சங்கள், எத்தனை சந்தர்ப்பங்களில் எத்தனை விதங்களில் படர்ந்திருக்கின்றது என்பதைக் காண முடிகிறது. கதை உலகத்தின் நியதி அது என்று அவர் பிரித்துக் கூறிய மாதிரி, வாழ்க்கையின் நியதியிலிருந்து எழுந்ததானாலும் கூட வெறுமனே கண்ணால் பார்ப்பதோடு நின்றுவிடாமல் கண்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பார்த்து மூளைக்குள் செலுத்தி தான் அறிந்து அதில் ஈடுபடும் முன்னரே கனிசமாக வேற்றுருவம் பெற்றுத் தனக்கென ஒரு கலாநியதியைப் பெற்றுவிட்ட அழகு அனுபவங்களாகும்" என்று குறிப்பிடுகிறார். கதைக்காக எடுத்துக்கொண்ட விஷயத்திலும் உணர்வு அழுத்தத்தோடு அதைச் சொல்லும் முறையிலும் அக்கறை காட்டியது போல கதை நிகழும் சூழலைப் படம்பிடித்துக் காட்டுவதிலும் ஆர்வம் கொண்டிருந்தார். அவர் கதைகளில் வருகிற சூழ்நிலை விவரிப்புக்கள் ரசனைக்கு விருந்தாகின்ற சொல்லாலயங்களாக காட்சி தருகின்றன. அப்படி வர்ணிப்பதிலும் அவருடைய தனிப்பார்வையும் கிண்டல் தொனியும் உயிர்ப்புடன் கலந்து காணப்படுகின்றன.

மனித வாழ்க்கையே முரண்பாடுகள் நிறைந்ததுதான். சுயநல நோக்குடன் செயல் புரிந்தவர்களின் போக்கில் மட்டுந்தான் முரண்பாடுகள் நிலவும் என்றில்லை. எதிர்பாராத இடங்களில், எதிர்பாராத சந்தர்ப்பங்களில் எதிர்பார்க்க முடியாத நபர்களின் மனநிலைகளிலும் முரண்பாடு தலை காட்டும். சில மனிதர்களை அதிசயமான முறைகளில் செயல் புரியும்படி செய்யும். வாழ்க்கையில் காணக்கிடைக்கின்ற இந்த நியதியையும் இவரது கதைகள் அழகாக எடுத்துக்காட்டுகின்றன. பேசுவது ஒன்று செய்வது வேறாகவும் இருக்கிற போக்கு சகல தரத்தினர் வாழ்விலும் காணப்படுவதை இவருடைய கதைகள் எடுத்துக் காட்டுகின்றன. வாழ்க்கை விசித்திரமானது; அதில் எதுவும் நடக்கலாம். மனிதர் பிறர் எதிர்பாராத வகையில் செயல் புரிந்து விடுகிறார்கள் என்பதை இவருடைய கதைகள் விபரிக்கின்றன. அதுபோன்ற சந்தர்ப்பங்களில் மனிதனின் குணாம்சங்கள் எடுப்பாகப் பிரகாசிப்பதையும் இவர் தனது கதைகளில் பதிவு செய்திருக்கிறார். மத்தியதர வர்க்க மனிதர்கள் உள்ளுக்குள் எவ்வளவு சிரமப்பட்டாலும் வெளிப்பகட்டாக செயல் புரிய வேண்டிய கட்டாயம் சில சமயங்களில் நேரிட்டு வருகிறது என்பதைக் காட்ட சில கதைகள் எழுதியிருக்கிறார்.

வாழ்க்கைக் கொடுமைகளில் மிகவும் கொடுமையானது வறுமை. வறுமை நிலை மனிதர்களைப் பாடாய்ப் படுத்துகிறது. இல்லாமையால்



பாதிக்கப்பட்ட பல ரக மனிதர்களும் அவர்களது மன நிலைகளும் வாழ்க்கை முறைகளும் இவரால் யதார்த்தமாகவும் உருக்கமாகவும் சித்தரிக்கப்பட்டுள்ளன. வாழ்க்கை மனிதனை யந்திரமாக மாற்றிவிட்ட போதிலும் மனித உணர்ச்சி முற்றாக மழுங்கிப் போவதில்லை. சில சமயம் அது விழித்துக் கொண்டு இவனும் மனிதன் தான் என்று உணர்த்த தவறுவதுமில்லை. அதேபோல் வாழ்க்கையின் அவலங்களையும், சமூகக் கொடுமைகளையும் உயர்ந்த நிலையில் இருப்பவர்கள் தாழ்ந்த நிலையில் வசிக்க நேரிட்டிருப்பவர்களை வஞ்சிப்பது, சிறுமைக் கும் சிறுமைக்கும் உள்ளாக்குவது, அநியாயமாகத் தண்டிப்பது, மூதவிய செயல்களைப் புரிவதையும் பொருளாதார ரீதியில் அடுத்தவனை ஏமாற்ற சதித் திட்டங்களை தீட்டுவதையும் உணர்ச்சியோடு விபரித்துள்ளார்.

பெண்கள் தொடர்பான கருணையான சிந்தனைகள் இவரது கதைகளில் ஊடுருவி நிற்கின்றன. ஒரு பெண் தனது இயற்கையின் தேவையைப் பூர்த்திசெய்து கொள்வதற்காக ஓர் ஆணுடன் திருமணம் புரிந்துகொள்ளாமலே பாசப்பிணைப்பு பெற விரும்புகிற எண்ணம். இவ்வெண்ணம் 1940களிலே வெகு துணிச்சலான சிந்தனை. இன்றைய சமூகத்தில் கூட இது சகஜமான நிகழ்ச்சி என்று ஏற்றுக் கொள்ளப்படுவதில்லை. ஆனால் இவரது கதைகளில் உள்ளது. மேலும் பொருந்தாத் திருமண விஷயத்திலும் பெண் பிறர் எதிர்பார்க்கிறபடி நடந்துகொள்ள வேண்டும் என்கிற கட்டாயம் எதுவுமில்லை. அவள் நினைப்பதும் போக்கும் தனித்தன்மை உடையதாக இருக்கவும் கூடும் என்று இவர் உணர்ந்து கிறார். ஆண், பெண் உறவுகளையும் உணர்வுகளையும் அடிப்படை யாக்கி இவர் எழுதியுள்ள கதைகள் மரபு மீறலை அடிநாதமாகக் கொண்டிருக்கின்றன. விதவையை பாத்திரமாகக் கொண்டு பலரும் கதைகளை எழுதியிருக்கிறார்கள். ஆனால் புதுமைப்பித்தன் பார்க்கின்ற கோணம் வேறு. விதவைக்கு வாழ்வு கொடுத்து தன்னை தியாகியாக்க முயலும் ஆண்களை ஒதுக்கி, பாசத்தை தேடும் பெண்களைக் காட்டுகிறார்.

உலக இலக்கியத்தில் பேய் பிசாசுகளைக் கதைப் பொருளாக்கி பயங்கரக் கதைகளும் நாவல்களும் ஏராளமாகத் தோன்றியுள்ளன. இந்தப் போக்கைப் பின் பற்றி புதுமைப்பித்தனும் தமிழில் பயங்கரக் கதைகள் பலவற்றை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எழுதியிருக்கிறார். பயம் எனும் உணர்ச்சி மனிதர்களை எப்படி எல்லாமோ ஆட்டுவிக்கிறது. பேய் பிசாசுகள் பற்றிய நம்பிக்கையை வளர்க்கிறது. இந்த உணர்வை ஆதாரமாக்கி மக்களின் நம்பிக்கையை அடித்தளமாக்கி சொற்களைக் கொண்டு கலைத் திறமையோடு கதைகளைப் பின்னியிருக்கிறார். இப்படி நடக்குமா? என்பதை விட இப்படி நிகழக்கூடும் என்று நம்பவைக்கிற விதத்தில் கதையை வளர்த்து தனது திறமையில் வெற்றி கண்டிருக்கிறார். புதுமைப்பித்தன் 'வேதாளம் சொன்ன கதை', 'ஞானக்குகை', 'கபாடபுரம்' எனும் பெயர்களும் சூட்டியுள்ளார்.

கதை சொல்லும் முறையில் விதவிதமான உத்திகளைக் கையாண்டு வெற்றி கண்டுள்ள புதுமைப்பித்தன் பழைய பாணிகளிலும் சுவாரஸ்யமான புதுக் கதைகளை உருவாக்கியிருக்கிறார். விக்கிரமாதித்தன் கதைப்பாணியில் புராண ரீதியில், பஞ்சதந்திரக் கதை மாதிரியில் மிருகங்களைக் கதாபாத்திரமாக்கி, இதிகாச மற்றும் காவியங்களில் இடம்பெற்றுள்ள கதாபாத்திரங்களையும் நிகழ்ச்சிகளையும் எடுத்துக் கொண்டு கால நிலைகளுக்கும் எழுதுகிறவர்களின் மனோபாவத்திற்கும் புதிய நோக்கிற்கும் ஏற்ப மாற்றியும், திருத்தியும், அழகுபடுத்தியும் எழுதுவது புதுமைப்பித்தனின் கதைகளில் காணப்படுகிறது. பழைய கதைகளை தன்னுடைய இஷ்டத்திற்குத் தகுந்தபடி புதிதாகப் புனைந்திருக்கிறார். தமிழ்ச் சிறுகதைத் துறையில் பெரியதொரு புரட்சியை உண்டாக்கியவர் புதுமைப்பித்தன் என்பது எல்லோராலும் ஏற்றுக் கொள்ளப்பட்ட கூற்று. மரபு ரீதியான நிகழ்ச்சி அடுக்குகள் கொண்ட கதைகளைப் படித்துப் பழகிய வாசகர்களுக்கு புதுமைப்பித்தன் கதைகள் புரட்சிகரமாகவும் அதிர்ச்சி தரக்கூடியவையாகவும் இருந்தன. பெரும்பாலாருக்கு அவை புரியவில்லை. இதற்கு அவர் கையாண்ட நடையும் ஒரு காரணமாகும். இதற்கு புதுமைப்பித்தனின் கூற்று "என் கதைகளின் காரசாரத்தைப் பற்றி 'எரிந்த கட்சி', 'எரியாத கட்சி' ஆடுகிறார்கள்" என்பது மனங்கொள்ளத்தக்கது.

பத்திரிகைத் துறையில் ஈடுபட்டு, எழுத்தாளராகி, கவிதை, கட்டுரை, சிறுகதை, குறுநாவல், நாவல், கடிதங்கள் என்பனவற்றை எழுதி



திரைப்படத்துறையிலும் கால்பதித்தார். எனினும் அவருக்கு வளமையாக அமைந்தது சிறுகதைத் துறையே. 'ஊழியன்' என்ற பத்திரிகையில் உதவி ஆசிரியராகப் பணிபுரிந்தார். 'மணிக்கொடி' என்ற பத்திரிகை மூலம் பிரபல்யமானார். மணிக்கொடி பத்திரிகை தனிக்கதைகள் மட்டும் பிரசுரிக்கும் பத்திரிகையாகி மாதம் இருமுறை வெளிவந்த போது இலக்கிய உணர்வும் எழுத்தாற்றலும் கற்பனைத்திறனும் உலக இலக்கிய ஞானமும் பெற்றிருந்த புதுமைப்பித்தன் அதிகம் எழுதினார். மணிக்கொடி எழுத்தாளர்கள் என்ற சிறப்புப் பெயர் பெற்ற கு.ப.ராஜகோபாலன், சிட்டி, சி.சு.செல்லப்பா, ந.பிச்சமூர்த்தி போன்றோருள் புதுமைப்பித்தன் தனிப் பெருமை பெற்றார். ஆழமும், அழகும், அழுத்தமும், கனமும் நிறைந்த கதைகளை எழுதியவர் எனப் புகழப்பட்டார். இக்காலப்பகுதியில் 'தினமணி' நாளிதழின் ஆசிரியர் குழுவிலும் இணைந்து கொண்டார். ஆங்கிலத்தில் வருகிற செய்திகளை தமிழாக்கம் செய்து தன் மொழி பெயர்ப்புத் திறனையும் காட்டினார். தினமணியில் புத்தக மதிப்புரைகள் எழுதினார். விறுவிறுப்பும் வேகமும் நிறைந்த முறையில் காரசாரமாக மதிப்புரை எழுதித் தனது விமர்சனத் திறமையையும் நிரூபித்தார்.

புதுமைப்பித்தனோடு எழுத்துலகில் பழகிய நண்பர்கள் சிலர் சினிமாத் துறையில் வெற்றிகரமாக முன்னேறிக் கொண்டிருந்ததால், திறமையும் புகழும் பெற்றிருக்கும் தானும் சினிமா உலகத்தில் ஈடுபட்டால் நன்கு பிரகாசிக்கலாம் என எண்ணி 1946 இல் 'ஔவையார்' படத்திற்கு கதைவசனம் எழுதினார். பின்னர் 'காமவல்லி' படக் கதைவசனமும் எழுதி நல்ல வருமானமும் பெற்றார். இதே காலப்பகுதியில் சொந்தமாகப் படம் தயாரிக்க முயன்றார். பர்வதகுமாரி புரொடக்ஷன்ஸ் என படக் கம்பனிக்குப் பெயரிட்டு, குற்றாலக் குறவஞ்சிக் கதையை வசந்தவல்லி எனப் பெயரிட்டு அது சம்பந்தமான வேலைகளில் ஈடுபட்டார். அது ஈடேறவில்லை. பின்னர் 'ராஜமுக்தி' என்ற படத்திற்கு கதை வசனம் எழுதியதால் 1947 இன் பிற்பகுதியில் படத்தயாரிப்புக் குழுவினரோடு புனா சென்றார். கடுமையான உழைப்பும் உணவு, கவனிப்பு என்பன சரியாகக் கிடைக்காததும், காசநோயின் தாக்கமும் 1948ல் மரணத்தைக் கொடுத்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஐயா, நான்


செத்ததற்கும் பின்னால்
நிதிகள் திரட்டாதீர்!
நினைவை விளிம்புகட்டி
கல்லில் வடித்து
வையாதீர்!

இது புதுமைப்பித்தன் எழுதிய கவிதை. கு.ப.ராஜகோபாலன் 1944 இல் இறந்தார். வறுமையில் இறந்ததினால் அவரது குடும்பத்திற்கு உதவி நிதி திரட்டல் செய்யப்பட்டது. திறமைசாலிகளான எழுத்தாளர்கள் அவர்களது வாழ்நாளில் உரிய முறையில் கவனிக்கப்படாமல் விடப்பட்டு, அவர்கள் இறந்ததற்குப்பிறகு அவர்களை வியந்து பாராட்டி விழாவெடுத்து நிதி திரட்டி கௌரவிக்கிற போக்கைக் கண்டித்து "ஓகோ உலகத்தீர்! ஓடாதீர்!" என்ற தலைப்பில் எழுதிய கவிதை இது. 1948ல் நான் நோயின்று குணமடைவதற்காக ஏற்ப்பாளைத்து எழுத்தாளர்களும் வாசகர்களும் எனக்கு பண உதவி செய்யமுடியுமா? தமிழ் நாட்டுக்கு நான் செய்த சேவை தகுதியானது. மறுக்க முடியாதது ஆனால் நான் இன்று சாகக் கிடக்கிறேன் தமிழ் நாட்டாரைப் பார்த்து, நீங்கள் எனக்கு உதவி செய்ய வேண்டும் என்று கேட்க எனக்கு உரிமையுண்டு. என் நிலைமையைப் பற்றி பத்திரிகைகளுக்கு எழுதி உதவி தேடுங்கள் என்று நண்பர்களுக்கு கடிதம் எழுதினார். கூறினார். ஆனால் எதுவும் கிடைக்கவில்லை.

சாகும் நிலையில் படுக்கையில் கிடந்த புதுமைப்பித்தன் தன் நண்பன் சிதம்பரத்திடம் "இலக்கிய ஆசை உனக்கு உண்டு. உன் முழுநேர உழைப்பையும் அதற்காகச் செலவழித்து விடாதே. இலக்கியத்தை தொழிலாகக் கொண்டுவிடாதே. அது உன்னைக் கொன்றுவிடும். இலக்கியம் வறுமையைத்தான் கொடுக்கும்" என்று கூறியுள்ளார். பேராசிரியர் ரகுநாதன். தேசியன் புதுமைப்பித்தன் எழுதிய கதைகளுக்கு முன்னுரையில் "வாழ்க்கை முள்ளில் சிக்கி ரத்தம் சிந்தும் ஒரு சோக இதயத்தின் குரல்களை இக்கதைகளில் கேட்கிறோம்." என்றார். ஆனால் புதுமைப்பித்தன் இறுதியாகக் கூறிய வரிகளை "வாழ்க்கை முள்ளில் சிக்கி ரத்தம் சிந்திய சோக இதயத்தின் அனுபவ பூர்வமான இறுதி எச்சரிக்கை" என்றுதான் குறிப்பிட வேண்டும். கவிதையில் புரட்சியை ஏற்படுத்திய 39 வயது வரை வாழ்ந்த பாரதியும் சிறுகதையில் புதுமையை ஏற்படுத்திய 42 வயது வரை வாழ்ந்த புதுமைப்பித்தனும் வறுமையால் இறந்த போதும் தமிழ் இலக்கிய உலகில் சாகாவரம் பெற்றவர்கள் என்பதே உண்மை. ■



நூல் வரவு



# மலையாள நாடும், மட்டக்களப்பும்

திரு. த. விவேகானந்தம் B.A (HONS) Dip. in Edu
அதிபர், மட் / வெல்லாவெளி கலைமகள் ம.வி.

24.02.2006 அன்று மட்டக்களப்பு அரசடி தேவநாயகம் அரங்கில் நடைபெற்ற கவிஞர் வெல்லவூர்க் கோபால் அவர்களின் "மலையாள நாடும் மட்டக்களப்பும்" நூல் அறிமுக விழாவின் போது திரு. த விவேகானந்தம் B.A ( HONS ) Dip in Edu, (அதிபர் மட் / வெல்லாவெளி கலைமகள் மகா வித்தியாலயம்) அவர்கள் ஆற்றிய அறிமுகவுரை.

'மலையாள நாடும், மட்டக்களப்பும்' எனும் நூலின் அறிமுகவுரையினை முன்வைப்பதற்கு முன்னர், நூலாசிரியர் கவிஞர் வெல்லவூர்க் கோபால் பற்றி, ஒரு சில வார்த்தைகள்.

முனைவர் எஸ்.பாலேந்திரன் M.A B.L PhD அவர்கள்,

'உணர்வுபூர்வமான கவிஞனாக, கோட்பாடுகளுடன் கூடிய ஆய்வாளனாக இத்தனைக்கும் மேலாக ஒரு புதிய சிந்தனையாளனாக வியாபித்து நிற்கின்றார்' எனக் குறிப்பிடுவது கண்டு இன்று நாமெல்லாம் பெருமைப் படுகிறோம்.

கவிஞர் வெல்லவூர்க் கோபால் அவர்கள் தன் மாணவப் பருவத்திலேயே இலக்கிய உலகினுள் காலடி எடுத்து வைத்து, 'கன்னி மலர்' தொடக்கம் 'மலையாள நாடும் மட்டக்களப்பும்' வரை 11 நூல்களைத்தந்து ஊரின் பெயரை தன் பெயருடன் இணைத்து வெல்லவூர்க்கோபால் என தனது கிராமத்திற்கும் பெருமை சேர்த்துக்கொண்டிருக்கிறார். அவரது உணர்வைத் தொடும் கவிதைகள், அவர் ஆய்வாளனாக உயர்ந்து நிற்ப தால் இல்லாது போனதே என்ற ஏக்கமும் எம்மிடம் உண்டு.

பேராசிரியர் மௌனகுரு தலைவர் நுண்கலைத்துறை கிழக்குப் பல்கலைக் கழகம் அவர்கள்,

"பட்டங்களைப்பெறத்தான் பல்கலைக்கழக அறிஞர்கள் இப்படித் தேடி அலைவார்கள். ஆனால் கோபால் பட்டத்திற்கும் அப்பால் தனது பிரதேசத்தின் மூல வேர்களைத் தேடி அலைந்துள்ளார். இன்னும் அலைகிறார். தேடலும் அலைவும், சிந்தனையாளனின் அடிப்படைத் தகைமைகள் எனக் குறிப்பிடுவது என்னை ஈர்த்தது. ஏனெனில் நூலாசிரியரின் தேடலும் அலைவும், அவரை ஒரு சிந்தனையாளனாக உயர்த்தியிருக்கிறது.

காலத்துக்குக் காலம் மட்டக்களப்பில் குடியேறிய இந்தியாவைச் சேர்ந்த தமிழ்நாடு, கேரளா, கர்நாடகா, ஆந்திரா, ஒரிசா முதலான பிரதேசங்களில் இருந்து வந்திணைந்த குலங்களின் சேர்க்கையே மட்டக்களப்பு தமிழ் சமூகமாக அடையாளப்படுத்துவதிலிருந்து... மட்டக்களப்பின் மூல வேர்களை நூலாசிரியர் கவிஞர் செல்லையூர்க் கோபால் தேடி அலைந்தார்.

(i) "தமிழகத்திலும், ஒரிசாவிலும், கேரளாவிலும் தேடியதில் "மட்டக்களப்பு வரலாறு ஓர் அறிமுகம்" - என்ற ஒரு ஆய்வு நூல்,

(ii) தமிழகத்தில் தேடியதில் - "தமிழக வன்னியரும் ஈழத்து வன்னியரும்" என்ற ஓர் ஆய்வு நூல்,

(iii) கேரளாவில் தேடியதில் - "மலையாள நாடும் மட்டக்களப்பும்" என்ற ஓர் ஆய்வு நூல்.

எமக்குக் கிடைத்த பெரும் பொக்கிஷங்கள். நமது வரலாற்றை அரையும், குறையுமாக தெரிந்திருந்த எமக்கு நிறைவாகத் தெரிந்து கொள்ள கிடைத்திருக்கின்றன".

அவ்வகையிலே, மறுவேதா வெளியீட்டின் 4வது வெளியீடாக வெளிவரும் "மலையாள நாடும் மட்டக்களப்பும்" ஒப்பீட்டு ஆய்வு நூல் இரு பெரும் பேராசிரியர்களின், சிறப்பாக மட்டக்களப்பு பேராசிரியர் சி.மௌனகுரு அவர்களின் முன்னுரையையும், கேரளா பேராசிரியர் எஸ். இராதாகிருஷ்ணா பணிக்கர் அவர்களின் அணிந்துரையையும் அணியாகக் கொண்டு 125 பக்கங்களுடன் ஆதவன் அச்சகத்தின் கைவண்ணத்தில் வெளிவந்திருக்கிறது.

நூலின் முன் அட்டைப்படமே ஒப்பீட்டு ஆய்வு நூலுக்கு கட்டியம் கூறுவதாக அமைகிறது. அட்டையில் கேரளாவின் பழமை வாய்ந்த திருவனந்தபுர பத்மநாபா ஆலயமும், மட்டக்களப்பின் பழமை வாய்ந்த கொக்கட்டிச் சோலை தான் தோன்றீஸ்வரர் ஆலயமும் - அவை முன்னால் கேரளாவின் கதகளியும், மட்டக்களப்பின் வடமோடியும் நூலுக்கு கன



கச்சிதமாக அமைந்திருக்கிறது. இந்நூல் நூலாசிரியரது நுழைவாயிலுடன் சேர்த்து 06 பிரிவுகளாக அமைந்திருக்கிறது. நூலாசிரியர் நுழைவாயிலில் "கேரளத்து மக்களின் பேச்சு வழக்கானது அதன் உச்சரிப்பிலும் ஓசை நயத்திலும் மட்டக்களப்பை ஒத்த தன்மையைக் கொண்டிருப்பதோடு, இங்குள்ளதைப் போன்று பழந்தமிழ் சொல்வளமே அங்குமுள்ளது."

" கேரளத்துக் கிராமங்களிலே கால் வைக்கும் போதும் தங்கள் பாரம்பரியங்களை மறந்து போகாத அம்மக்களோடு உண்டு உறவாடி மகிழும் போதும் நமக்கு ஏற்படுகின்ற இன்ப உணர்வுகளும் அனுபவங்களும் மட்டக்களப்பு மண்ணுக்குள் மீண்டும் மீண்டும் உழுன்று வருவதை நிரூபித்திருக்கும்" எனக் குறிப்பிட்டுச்செல்வது, நூல் எதைச் சொல்லப் போகின்றது என்பதற்கு ஓர் எடுத்துக்காட்டு.

அடுத்த பிரிவு .......

**மலையாள நாடும் மட்டக்களப்பும்:**

இப்பிரிவில் இப்பிரதேசங்களைப் பற்றி அறிமுகம் செய்து அவற்றின் ஆட்சி அமைப்பு, சமூகக் கட்டமைப்பு என்பன வரலாற்று ஆதாரங்களுடன் ஆண்டு ரீதியாக முன்வைத்து வரலாற்றை அறிய வழி செய்கிறது.

அடுத்தபிரிவாக அமைவது

**விவசாய தலைமைத்துவமும் நிலவுடைமையாளர்களும்:**

மலையாளத்திலே நிலவுடைமைத் தலைமைத்துவம் சார்ந்து... நாடுடையார் அல்லது நாடு வழி நிலை பெற்று நீடித்திருந்ததையும் அதுபோன்று மட்டக்களப்பு பிரதேசத்தில் நிலவுடைமைத் தலைமைத்துவம் வன்னியனார் என நீடித்து நிலைத்து இருந்ததையும் வரலாற்று ரீதியாக தக்க சான்றுகளுடன் எடுத்துக்காட்டி ஒப்பு முறை வேறு அடையாளம் காட்டுகிறார்.

அடுத்த பிரிவாக அமைவது

**மட்டக்களப்பிலும் மலையாள நாட்டிலும் சமுதாய தொடர்முறைமை:**

கேரளத்திலே நாடுடையார், கரைநாயர் (கைத்தலைவர்) போடியார், போடி போன்ற தலைமைத்துவங்கள் போல மட்டக்களப்பிலும் வன்னியனார், உடையார், வரப்போடி, போடிகள், போடி என்ற தலைமைத்துவங்கள் காணப்படுவதையும் கேரளாவில் வயற் கூலியாளுக்கு - வயற்பணியாளர் என வழங்குவது போல் மட்டக்களப்பில் அதற்கு முல்லைக்காரர் என



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வழங்குவதையும் எடுத்துக்காட்டி இரு பிரதேசங்களுக்கிடையிலான ஒத்த தன்மையை எடுத்துக்காட்டுகின்றார்.

அடுத்த பிரிவாக அமைவது

**மருமக்கள் தாயம் தாய்வழி முறை :**

கேரளத்தில் உருவான தாய்வழி, மருமக்கள் தாயம் உரித்து - மட்டக்களப்பில் உருவான தாய்வழி முறைமை - மட்டக்களப்பிற்கும் மலையாளத்துக்குமிடையில் உள்ள ஒருமைத்தன்மை வெளிக் கொணரப் படுகிறது. உதாரணத்திற்கு திருமணமான பெண் திருமணத்தின் பின் தாய் வீட்டிலேயே இருப்பது இரு பிரதேசங்களிலும் காணப்படும் ஒத்த தன்மையாகும் என்பது போன்ற பல விடயங்கள் இவ் அத்தியாயத்தில் இடம் பெறுகிறது.

அடுத்த பிரிவாக அமைவது

**கண்ணகி வழிபாடு :**

கி. பி 2ம் நூற்றாண்டில் கண்ணகி வழிபாடு கேரளத்தில் முக்கிய வழிபாடாக இடம் பெற்றமையை ஆதார பூர்வமாக முன்வைத்து மட்டக்களப்பில் 50ற்கு மேற்பட்ட ஊர்களில் கண்ணகி வழிபாடு இடம் பெறுவதை ஆதார பூர்வமாக முன்வைத்து கேரளத்துக் குடியேற்றத்தின் விளைவே இதுவென நம் முன்னோரை அடையாளம் காட்டுகிறார்.

அடுத்த பிரிவாக அமைவது

**நிகழ்த்து கலைகள் :**

கேரளத்துக் கலை வடிவங்களை ஒத்ததாகவே மட்டக்களப்பு கலை வடிவங்களும் இருப்பதனை பல்வேறு ஆதாரங்களுடன் நிரூபித்து ஒத்த தன்மையை எடுத்துக்காட்டுகிறார்.

அடுத்த பிரிவாக அமைவது

**மந்திரக் கலை :**

மலையாள நாடும் மட்டக்களப்பும் மந்திர வித்தாண்மையில் நீண்ட கால சிறப்புக்குரியவை என குறிப்பிடும் நூலாசிரியர் இரு பிரதேசங்களிலும் மந்திரங்களின் பாவனையில் ஒத்த தன்மை, அத்துடன் தன்னுடைய எதிரியை வீழ்த்த கையாளப்படும் துஷ்ட தேவதைகளின் ஒத்த தன்மை என மந்திரக் கலையின் சகல பரிமாணங்களுடன் சோதிடக் கலையில் காணப்படும் ஒத்த தன்மைகளையும் இவ் அத்தியாயத்தின் மூலம் திறவி நம் மூல வேரினை நமக்கு அடையாளம் காட்டுகின்றார்.



இறுதியாக...

மலையாள நாடும் மட்டக்களப்பும் என்ற ஒப்பீட்டு ஆய்வு நூலான நமது வரலாற்றை நமக்குத் தர அவரது அயராத பயணங்களுடனும், தேடலுடனும், உசாத்துணை நூல்களாக தமிழ், ஆங்கிலம், மலையாளம் ஆகிய நூல்களாக 56 நூல்களை கையாண்டிருக்கின்றமை இந்நூலின் பெறுமானத்திற்கு தக்க சான்றாகும்.

இவ்வகையிலே...

மட்டக்களப்பிற்கும் மலையாளத்திற்கும் இடையேயுள்ள ஒத்த தன்மை ஒருமைப்பாடு என்பனவற்றை வரலாற்று ஆதாரங்களுடன் தந்து மட்டக்களப்பின் மூல வேர்களின் ஒருபகுதி பண்டைத் தமிழகத்தின் ஒரு அங்கமாக விளங்கிய சேர நாட்டில் ( மலையாள நாடு , கேரளா எனவும் அழைக்கப்படுவது சேர நாட்டையே ஆகும் ) இருந்து குடியேறிய குலம் என்பதனை எம்மால் இந்நூல் மூலம் காண முடிகிறது. இவ் வகையிலே மட்டக்களப்பு மக்களுக்கான ஒரு வரலாற்றுப் பொக்கிஷம் இந்நூல் என்பதில் சந்தேகமில்லை.

**தகப்பன் :** ராசா, செங்கதிர் சஞ்சிகையில் இரண்டு பிரதிகள் வாங்கித்தந்து ஒன்டை கொண்ணனுக்கு கனடாவிற்கும் மற்றதை கொக்காவிற்கு லண்டனுக்கும் அனுப்பச் சொன்னனான் இல்லையே? ஒண்டு இங்கை இன்னும் கிடக்குது. ஏன் அனுப்பவில்லை?

**மகன் :** அப்பா, நீங்க தானே சஞ்சிகையை நல்லா வாசிச்சுப் போட்டு அனுப்பச் சொன்னனீங்கள். ஒன்டை வாசிச்சுப் போட்டு அண்ணனுக்கு அனுப்பிப் போட்டு அக்காவிற்கு அனுப்பிறதை இப்ப வாசிச்சுக்கொண்டு இருக்கிறன்.

- அருள் -



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்ன மச்சான் கணபதி, கொஞ்ச நாளா உன்ர சிலமனைக் காணலில்ல எங்கடாப்பா போன?...... அடடெ மெய்தான் நான் நுப்பரவா மறந்து போயித்தன். எலக்சன் வெள்ளத்தில இழுபட்டுப் போய் வந்திருக்கிறாய் தெரியுது. இன்னும் உன்ர களைப்பு மாறல்ல.

உன்னக் கண்ணாலயும் காணல்லெண்டு போட்டு உன்ர பொஞ்சாதி கனகம்மா மனித உரிமைக் கந்தோரில போய் ஒப்பாரி வச்சாளே எங்க போறனெண்டாலும் அவளிட்ட ஒரு வார்த்தை சொல்லிப் போட்டு போயிருக்கலாம் தானே?

# விளாசல் வீரக்குட்டி



என்ன இனியாவது நாடு உருப்படுமா? சாமான் சக்கட்டுகளுக்கு விலைவாசி குறையுமா? தங்குதட ஒட்டமில்லாம பஸ்ஸில போய் வரலாமா?

நேத்து, நல்ல சுத்தமான தேன்போத்தலொண்ட எடுத்திருக்கு நம்மட வாசுப் பக்கம் போனனான். பஸ்ஸ உட்டு இறங்குறதும், ஏறுறதுமா வழுக்குமர விளையாட்டுப் போல என்ட உசிரே போயித்து.

காலம்புற திண்டுத்துப்போன தண்ணிச்சோறும், தயிரும் வாயால வழுக்கிட்டு எல்லாம் வந்துட்டுது. ஒண்டுக்குப் போகக் குந்தினாலும் குண்டு வைக்கிறானாண்டு அவரு எட்டியெட்டிப் பார்க்கிறானுகள். என்ன உத்தரிப்புடா மச்சான் நம்மட சனங்களுக்கு! இது ஒரு பக்கத்தால துன்பம் அடுத்த பக்கத்தால வானக்குறுப்பம் வேற.

பங்குனி மாதத்தில என்ன மண்ணாங் கட்டி மழையெண்டு கேக்கிறன்! பங்குனி மாதத்தில பாதவழி நடந்து போறவனைப் பார்த்திருக்கவளும் பாவமானி யெண்டு சொல்லுவாங்க அவ்வளவு வெயில் கொளுத்திறெறியும்! இதென்னடாண்டா தெப்பக்குளம் போலதான் வீடு வாசல் எல்லாம் ஒரே வெள்ளக் காடு. பத்து வருஷத்திற்கு ஒருக்கா இப்படி மழ பெய்யிறதாம் என்டு இவன் வேலாப்போடி சொல்லுறான். எனக்கெண்டா ஒரு இழவும் தெரியுதில்ல. ■

-மீசுவன்-







# சங்கடமான சமையல விட்டு...

-பீ.பீ. அந்தோனிப்பிள்ளை-

'சங்கடமான சமையலை விட்டு சங்கீதம் பாடப் போறேன்...' என்றொரு சினிமாப் பாட்டு அந்தக் காலத்தில் பிரசித்தம். சமைய லென்றால் சங்கடம் மட்டு மில்லச் சந்தோசமும் இருக்கு மெண்டது என்ட அனுபவம்.

ஒரு சில வேலைகள் பொம் பிளைகளுக்குத்தான் என்டு, ஒதுக்கி வைச்சிருந்த காலத்திலே, சமையலையும் அப்பிடித்தான் என்று நாங்க நினைச்சுக் கொண்டிருந்த காலம் போய், பொம்பிளைகள் வாகனம் ஓட்டிற தியிருந்து, விமானமோட்டப்படலை போய் வாற அளவுக்கு முன்னேற, ஆம்பிளைகளும் ஆசுப்பத்திரி தாதிமார் வேலையிலிருந்து சமையல் கட்டிலேயும் புகுந்து விளையாடத் துவங்கிற்றாங்க.

அது கிடக்க நான் எப்படி இந்தச் சமையலுக்கு வந்துட்ட னெண்டா? அது தனிக்கதை,

சனத்தொகை குறைவான மன்னார் மாவட்டம் போன்ற இடங்களில் பாடசாலைகள் மிகவும் குறைவு. ஏழெட்டுக் குடும்பங்களோடேயும் சில ஊர்கள் இருக்கும்.

அந்தக்காலத்தில் எஸ்.எஸ்.சி வரை படித்த பெடியன்கள் வேறு இடங்களில் இருந்து வந்து தங்கட சொந்தச் செலவில ஒரு ஓலையால மேய்ஞ்ச பள்ளிக் கூடத்தைக் கட்டி, அங்க உள்ள பிள்ளைகளையும் சேர்த்து சம்பளமில்லாமல் படிப்பிச்சு, பிள்ளைகளிடைய தொகையையும் கூட்டிக்காட்டி, ஒரு அரசாங்க பள்ளிக் கூடத்தையும் பதியப் பண்ணிப் போடுவாங்க. அவங்க ளுக்கும் வேலை நிரந்தரமாகிச் சம்பளமும் வரத் துவங்கிடும்.

ஏதோ துவக்கத்தில வசதி யில்லாத கிராமங்களில் உள்ள மக்களுக்குச் சேவை செய்ய வந்த தியாகசீலர்கள் மாதிரி நடிப்பாங்க. இரண்டொரு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மறுநாட்டில யாரார எங்க படிக்கிறது என்ட விசயம் படிபட்டுப் போக, மாற்றம் எடுத்துக்கொண்டு தங்கட ஊருக்கு அல்லது வேற வசதியான பாட சாலைக்கு மாற்றம் எடுத்துக் கொண்டு போய் விடுவாங்க. பிறகென்ன கல்வித் திணைக் களத்தைச் சேர்ந்த அதிகாரிகள் என்னைப் போல வாய் செத்த ஆக்களத் தூக்கி அந்தப் பள்ளிக் கூடத்தில தூக்கிப் போடுறதாலே வழக்கம். இப்படித்தான் நானும் வேலைக்குச் சேர்ந்த புதிசில ஒரு காட்டுப் பள்ளிக்கூடம் கிடைக்க, அங்க போய்ச் சேர்ந்ததும் அரப்ப பிடிக்க வந்ததும்.

உத்தியோகத்துக்கும் அரப்ப பிடிக்கிறதுக்கும் என்ன சம்பந்தம் என்டு நீங்க கேக்கலாம். அப்படிப்பட்ட இடங்களில உத்தி யோகம் பார்த்தவனுக்குத்தான் அந்த அனுபவம் தெரியும். அங்க மீனும் வராது ஒழுங்கான சாப்பாடு தரக்கூடிய வசதியுள்ள ஆக்களு மில்ல. சாப்பாட்டுக் கடைகளு மில்லையெண்டா என்னதான் செய்றது. ஒரு மாசம் ஒரு வீட்டில சாப்பிட்டுப்பாத்தன் வருவதும் முழுக்க மீனாத் தின்ட நாக்குக்கு மீனில் லாத சாப்பாடு சரி வருமா? சனி ஞாயிற்றுக்கிழமைகளில வீட்ட போயிற்று வரேக்க மீன் பொரிச்சு எடுத்துக் கொண்டு அதோட கருவாடு பருப்பெல்லாம் நான் சாப்பிட்ட வீட்ட குடுத்துச் சாப்பிட்டுப் பார்த்தன். அதுக்கு என்ட ஒரு மாதச் சம்பளமும் காணாது போல வர, அடுத்த முறை வீட்ட போயிற்று வரேக்க அரிசி, கருவாடு, பருப்பெல்லாம் கொண்டு வந்து சமையலைத் துவங்கிற்றன். ஊர் ஆக்க ளிட்டச் சொல்லிப் பள்ளிக் கூடத்து அறையோடு சேர்த்து ஒரு கொட்டில் இறக்கி அதுக் குள்ள தான் அடுப்ப மூட்டினன். வீட்டில இருந்து வரேக்கயே ஆத்தையிட்டச் சில விசயங் களைக் கேட்டு வந்திருந்தாலும், சோத்தில எப்போதும் கல்லுத்தான். அடுத்த முறை வீட்ட போய் வரேக்க அவுங்கட்டச் சொல்லி அரிசியப் புடைச்சு கல்லில்லாமத்தான் கொண்டு வந்தனான். துவக்கத்தில சோறு ஒரு நாள் புழுங்காம அரிசியாயி ருக்கும். இன்னொரு நாள் குழைஞ்சு புக்கையாப் போயிடும். என்ன செய்றது சாப்பிட்ட வீட்டையும் விட்டாச்சு. பசிக் கொடு மையில சமைச்சதைச் சாப்பிட்டு முடிக்க வேண்டியதுதான்.

எல்லாம் கொஞ்ச நாள்தான் பிறகு தண்ணிய அளவா வைச்சு பானையை அடுப்பில வைச்சு சரியான நேரத்தில நெருப்பத் தணிச்சு விட்டா சோறு சரியா வெந்தும், குழையாமலும் வந்திருக்கும். உப்பும் , புளியும் ஒரு நாள் கூடியும் ஒரு நாள் குறைஞ்சும் இருக்கும்.



சிலவேளைகளில் உப்போ, புளியோ இருக்காது. போட மறந்திருப்பன், மரக்கறிகளுக்கெல்லாம் புளிப்புளியப் போட்டு அது அவிந்தும் அவியாமலும் ஒரு வித்தியாசமான மணத்தோட, அது வேற கதை. இப்ப என்னென்ன கறிக்கு என்னென்ன எப்பிடிப்ப போடவேணுமெண்டது எனக்கு தண்ணிபட்ட பாடம்.

சமையல் என்டு வெளிக்கிடுற ஆக்களுக்கு என்னுடைய அன்பான ஆலோசனைகள் இரண்டொன்டச் சொல்லித்தாறன். வீட்டில என்ன கறியெண்டாச் சம்பல் என்டு சொல்ல சில பேருக்கு கூச்சமாய் இருக்கும். சம்பல் என்டால் கொஞ்சம் எல்லோருக்கும் இளக் காரம். இதுக்கு முக்கிய காரண மென்னண்டா எது அதிகம் கிடைக் கிதோ எது மலிவாகக் கிடைக் கிதோ அது எப்படிப்பட்ட பொருளா யிருந்தாலும் அதைக் குறைவாத்தான் நாங்க மதிக்கிறது.

இப்பதான் தேங்காய்க்கு தட்டுப்பாடு தேங்காய் மலிவாகக் கிடைக்கிற காலத்தில தேங்காயத் திருவி அஞ்சாறு மிளகாயும் வெங்காயத் தையும் போட்டு இடிச்சோ அரைச்சோ எடுத்தாச் சம்பல் ரெடி. உப்பையும் புளியையும் விட்டுச் சாப்பிட வேண்டி யதுதான். வேலையும் மிச்சம் குறைவு. தேங்காய், மிளகாய், வெங்காயம் மூன்டும் தான் எல்லாக் கறிகளுக் கும் ருசியைக் குடுக்கிறது. எப்படி யிருந்தும் சம்பலுக்கு இந்தக் கெதி. மீனோ இறைச்சியோ இல்லாத நேரத்தில வெறும் மரக்கறி வாய்க்க இறங்காது. அந்த நேரத்தில வெறும் பருப்புக் கறியோ மரக்கறியோ ஒரு சம்பலோட நல்ல ருசியாத்தானிருக்கும்.

ஒரு முறை நான் லீவில வீட்ட போக ஆத்த சொன் னாங்க, "தம்பி ரசப்பொடி இடிச்சுத்தாறன் கொண்டு போய் வைச்சுக்க, அவசரத் துக்கு சட்டியில தண்ணிய ஊத்தி ரசப்பொடியப் போட் டுக் கொதிக்க வைச்சா நல்ல ரசமா வந்திடும் என்டு". நானும் கொண்டு போய் ஒருநாள் ரசம் வைச்சுக் குடிப்பமே என்டு ஆத்த சொன்னமாதிரி சட்டியில ரசப்பொடியப் போட்டு தண்ணிய ஊத்தி அடுப்பில வைச்சுக் கொதிக்க வைச்சு குடிச்சுப் பார்த்தா ரசம் மாதிரி யேயில்ல, வீட்ட போனபோது ஆத்தையிட்ட கேட்டன் என்ன உங்கட ரசப்பொடி ரசம் மாதிரியே இல்ல சப்பெண்டு இருக்கிது என்டு. உப்புப் புளி போட் டியா என்டு அவுக கேட்க வும் தான் எனக்கு விசயம் விளங்கிச்சுது. நான் சரக் குச் சாமான்களை இடிக்க உரல், உலக்கை தேடியலை யாமைத்தான் அவுக வீட்டில எல்லாத்தையும் இடிச்சுத் தந்தது. நான் தான் யோசிச்சு உப்புப் புளி போட்டி ருக்கோணும். இப்படி எத்த னையோ கூத்து.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எப்படியோ போகப் போக பல விடயங் கள் புடிபட்டுப் போய் நானும் சேர்ந்த ஒரு சமையல் காரனாய் போயிற்றன். அப்பவும் சில விஷயங்கள் சிக்கலாகத் தான் இருக்கு. பலசரக்குச் சாமா னுள்ள போத்தல்கள், உப்புப் போத்தல், கத்தி, அப்பை, சட்டியெண்டு சமைய லறை முழுக்க சாமான்கள் நிறைஞ்சு போய் இருக்கும். உப்புப் போத்தல் இடறி உப்புக் கொட்டுப்படுறதும் போத்தல் உடையிறதும் சர்வ சாதாரணம்.

சமையல் முடிஞ்சு சாப்பிட ஆயத்தப் படுத்தினா எங்கேயிருந்து சாப்பிடுறது. சமையலறை முழுக்க சாமான் பரவி யிருக்கும். பிறகு பள்ளிக்கூடப் பிள்ளை களைக் கூப்பிட்டு சாமான்கள் ஒதுக்கின பிறகுதான் சாப்பாடு. ஒவ்வொரு முறை யும் ஒவ்வொரு சாமானையும் தனித் தனியான இடத்தில் வைக்கவேணு மெண்டு நினைச்சாலும் அது இந்த மறதி விடுதா. பழையபடி ஒவ்வொரு நாளும் சாமான் தடவுறவேலைதான்.


இதில பாருங்க நாளிக்கச் சட்டிய அடுப்பில வைச்சு எண்ணெய ஊத்திக் கொதிக்க விட்டிட்டு வெங்காயம், பெருஞ்சீரகம், நச்சீரகம், வெந்தயம் எண்டு ஒவ்வொண்டாத் தேடி யெடுத்து எண்ணெய்ச் சட்டிக்குள்ள போடுறதுக் குள்ள முதல்ல போட்ட சாமான் கருகிப் போயிடும்.

என்ன இருந்தாலும் சமையல் தெரிஞ்சிருக்கிறதில் இருக்கிற நன்மை யும் எவ்வளவோ இருக்கு. வீட்டில மனிஷியோட அப்பப்ப சண்டை வாறது நம்மளப் போல மனுசருக்கு ஒரு புதுமையான விஷயமல்ல. ஏதோ ஒரு சந்தர்ப்பத் தில, "உன்னட்ட கையால சோறு வாங்கித் தின்னு றதை எனக்குச் செருப் பால அடிக்கோணும்" என்று ரோஷமாச் சொல் லிப் போட்டன். ஒரு நேரம் ரெண்டு நேரம் சாப்பாடில்லாம, பிறகு வயிறு காயக்குள்ள தான் தெரியும் என்ன மடவேல செய்திறம் எண்டு. வேறென்ன மனுஷிற்ற சரண்டராகிறதத் தவிர வேற வழியில்ல.

சமையல் தெரிஞ்சிருந்தா முறுகல்ல வைச்சாலது அடுப்ப மூட்டிரலாமல்லா, சமையல் தெரியாமலிருந்து தெரிவில மனுஷியோட உறவாப் போற நன்மையு மிருக்கு. நான் துவக்கத் தில சொன்னது போல சமையல் வேலையில சங்கடமுமிருக்குச் சந்தோ ஷமும் இருக்கு எண்டது. உங்களுக்குத் விளங்கி யிருக்கும் இப்ப.

கடைசியா ஒரு வார்த்தை பெண்ணியம் பற்றி எழுதிற ஆக்களுக்கும் அந்த விமர் சனம் பண்ணுறவிற ஆக்க ளுக்கும், நீங்களும் அடுப் படியில் கொஞ்சம் உதவி செய்து கொடுத்தீங்க எண்டாக் கொஞ்சம் புண்ணியமாயிருக்கும். ■





# ஆர்தர் சி.கிளார்க்
## (Sir Arther Charles Clarke)

— அசி —

விஞ்ஞான புனைகதை எழுத் தாளரும், வானியலாளருமான ஆர்தர் சி.கிளார்க் அவர்கள் 19.03. 2008 அன்று தனது 90வது வயதில் கொழும்பிலே காலமானார்.

இங்கிலாந்திலே சொமர் செட் என்ற இடத்தில் 16.12.1917 இல் பிறந்த கிளார்க் அவர்களின் தந்தை ஒரு விவசாயி. தாய் அஞ்சல் நிலையமொன்றில் தந்திகளை அனுப்பும் பணி புரிந்தவர். குடும்பத்தில் நான்கு குழந்தைகளில் மூத்தவரான இவர் அருகிலுள்ள டாண்டன் (Taunton) நகர உயர்நிலைப் பள்ளியில் கல்விப் புலமைப் பரிசில் மாணவனாகக் கல்வி பயின்றார்.

சிறுவயதிலே வானியலில் ஈடு பாடு கொண்டவர். ஆரம்பக் கல்வியை முடித்துக் கொண்டவர் தொடர்ந்து பல்கலைக்கழகத்தில் படிக்க அவரது குடும்ப வருவாய் போதாமையினால் கல்வித் திணைக் களத்தில் பணியாற்றினார்.

இரண்டாம் உலகப் போரின் போது ரோயல் வான் படையில் இணைந்து ராடர் பாதுகாப்புத் திட்டத்தில் பணியாற்றத் தொடங்கினார். அவர் ரோயல் வான் படையில் கடமையாற்றிய 1939–1945 காலகட்டத்தில் உயர் பதவிகளை வகித்தார். இரண்டாம் உலகப் போரின் முடிவின் பின்னர் லண்டன் அரச கல்லூரியில் கணிதம் மற்றும் இயற்பியலில் பட்டம் பெற்றார். 1937 தொடக்கம் 1945 வரையுள்ள காலப்பகுதியில் பல புதினங் களை அவர் எழுதியிருந்தாலும் 1946ம் ஆண்டில் அவர் எழுதிய Astounding Science Fiction முதன் முதலில் விற்பனைக்கு வந்தது. 1949 இல் 'Science Abstracts' என்ற இதழின் உதவி ஆசிரியராகப் பணியாற்றினார். 1951 இலிருந்து முழு நேர எழுத்தாளரானார்.

இவரது ஆக்கங்கள் எதிர்வு கூறத்தக்கவை. உலகைச்சுற்றி வலைகளைகள் பறப்பதற்குப் பல ஆண்டுகளுக்கு முன்னமே 1945 இல் தொலைத் தொடர்பு செயற்கை கோள்கள் பற்றி விபரமாக எழுதினார். இவர் நூற்றுக்கும் அதிகமான நூல்களை எழுதியவர். இவர் நீண்டகாலமாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புவியிடமிருந்து மாற சுற்றுப்பாதை கருக்கு (புவி நிலை வலயம்– Geostationary orbit) சர்வதேச வானவியல் சங்கம் 'கிளார்க் வலயம்' (Clarke orbit) எனப் பெயர் சூட்டியது.

1954 இல் இலங்கைக்கு முதல் முறையாக வருகை தந்த கிளார்க் 1956 இல் இலங்கையின் கௌரவ பிரஜாவுரிமை பெற்றார். 1960 இல் ஒருவகை போலியோ நோயினால் பாதிக்கப்பட்ட அவர் சக்கர நாற்காலியில் இருந்தே தமது பணிகளை ஆற்றினார். விஞ்ஞான புனைகதையில் மிகச் சிறந்த எழுத்தாளர் என பிரித்தானிய மகாராணி எலிசபெத் அவர்களால் கௌரவிக்கப்பட்டு 1998 இல் சேர் பட்டம் ('நைட்' – Knight) பெற்றார்.

இலங்கையின் செய்மதி தொடர்பாடல் தொழில் நுட்பத்தின் முன்னோடியாகக் கருதப்படும் இவருடைய சில விஞ்ஞானக் கோட்பாடுகள் பாடநூலிலும் சேர்க்கப்பட்டுள்ளன. அத்துடன் இலங்கையின் மொறட்டுவையில் ஆர்தர் சீ கிளார்க் ஆய்வு மையமும் இயங்கி வருகிறது. அமெரிக்க எழுத்தாளருடன் இணைந்து அண்மையில் இவர் எழுதிய 'த லாஸ்ட் தியோரம்' நூல் இன்னமும் வெளிவர இருந்த நிலையிலேயே இவர் உயிரிழந்தார். ■

## "பதினாறும் பெற்றுப் பெருவாழ்வு வாழ்க"
## பதினாறும் எவை?

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 01) | கல்வி | 02) | வெற்றி | 03) | புகழ் |
| 04) | ஆற்றல் | 05) | நன்மக்கள் | 06) | நெல் |
| 07) | அறிவு | 08) | பொன் | 09) | பெருமை |
| 10) | ஆயுள் | 11) | நல்லூழ் | 12) | துணிவு |
| 13) | நோயின்மை | 14) | இளமை | 15) | நுகர்ச்சி |
| 16) | பொருள் | | | | |



சிறுகதை

# பேய்களுக்கு ஒரு வாழ்க்கை!

-எஸ்.எல்.எம்.ஹனீபா-



அடிபட்ட பாம்பைப் போல அன்றையப் பகற் பொழுது சுருண்டுகொண்டு மறையும் வேளை....

அப்பிக்கொள்ளும் கரியைப் போலே இரவு மெய்ந்து மெய்ந்து வந்துகொண்டிருந்தது.

எங்கிருந்தோ கூட்டம் கூட்டமாக நரிகளின் ஓலங்கள் செவிப் பறையினை தாளாதும் வண்ணம் முட்டி மோதிச் செல்கிறது.

அந்த ஓலங்களுக்கப்பால், நீண்ட தூரத்தில் மேலைவில்லிலிருந்து வரும் யானைகளின் பிளிறல்....

தலைக்கு மேலால் பறந்து செல்லும் ஆள்காட்டிக் குருவிகளின் கீயூ.... கீயூ.... ஓசைகள். பேய்கள்தான் ஆற்றுக்கு வருகின்றனவோ?

என் உணர்வுகள் உறைந்து கொண்டு வருவதைப் போல - கால்கள் முன்னேற மறுத்து அடம் பிடிக்க - ஓர்மம் எங்கோ ஓடி ஒழிந்துகொண்டதைப் போல....

"சே! இண்டைக்கு அதை எப்பிடியும் பாக்கத்தான் வேணும்!" எனக்கு நானே தைரியம் கொள்வதில் முந்திக் கொள்கிறேன்.

கையில் தொங்கிய 'டோர்ச்சை' சரி பண்ணிக்கொண்டு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மெதுவாகவே நடக்கத்
தொடங்கினேன்.

"பூக்...பூ...பூக்...!" ஒருகணம்
இரத்தம் உறைந்து
வருவதைப்போலே.....

"சீ! பன்றிகள்.... ஊராமிலே
புறக்குதுகள்..."

பயத்தை உதறிக்கொண்ட எனது
கால்கள் அடிக்கொரு தரம்
தயங்கியவைகளாக நடை
போடுகின்றன.

இடையில் - மனம்,
போன வெள்ளிக்கிழமை இரவு
துறைக்காரனோட பெண்சாதியும்
ரசிகாட உம்மாவும் சொன்ன
வார்த்தைகளைத் தேடியது.

பயத்தில் கண்களிரண்டும் பிதுங்கி
வெளித்தள்ளட்டவையிலிருந்து
வழிந்தோடும், வெற்றிலைப்
பாளியைப் புறங்கையால்
வழித்துக்கொண்டே அவர்கள்
கூறியதை....

"டாக்குத்தர்! உங்களுக்குத்
தெரியுமெ, பொழுதுபட்டா எங்கெ
துறையிலே ஒரு பொம்பிள
தலைமயிரை விரித்துப்
போட்டுக்கிட்டு, தாய் பெத்த
மேனியோட குளிக்கிற வருது.
என்னதான் அழகு டாக்குத்தர்".



"மெய்தானா?" எனது சந்தேகம்
சவாலாக அவர்கள் அந்த வீட்டு
மரியாதையையும்
சாட்சிக்கழைக்கிறார்கள்.

"ஓம் டாக்குத்தர்! கலைமா
லெப்பைட பொஞ்சாதியை முதல
கொண்டு போன நாளிலிருந்து -
நெடுகெ இப்பிடித்தான். அவளெ
ஆவிண்டுதாங் கதைக்காங்கெ.
என்னதான் அழகு மாத்தயா?"

அதிசயமும் அங்கலாய்ப்பும் அந்தக்
கண்களில் ஒளிர்ந்தன.

'அப்ப நான் இதெப்பாக்கத்தான்
வேணும்' எனது உறுதி கலந்த
குரலில் இருந்த நம்பிக்கையைச்
சிதறடிப்பதைப் போல அவர்கள்...

"போவாணாம் டாக்குத்தர். பயந்து
கியந்து போனாலும் கரெச்சேல்"

"சீ! அதெயுந்தான் பாப்பமெ"

மீண்டும் என்னை ஓர்மத்திருத்தி
தோப்த்து எடுத்துக் கொண்டவனாக
நடைபோடுகின்றேன்.

இருள் வானத்தை நீக்கமற
அடைத்துக்கொண்டுவிட்டது.
தூரத்தே மிக மழையில்
தோய்ந்த ஊதல் காற்று உடலில்
'சில்'லென்று உறைந்துவிடுது.

வேலவை வில்லிலிருந்து யானைகள்
புல்லடிக்கும் சத்தம், தனி
நெருக்கும் தாளலயத்தோடு.....

"சக்கு...சக்கு...சக்கு...."

நானும் அந்த சப்தத்தை மனதிலே
சப்தித்துக்கொண்டவனாக....

ஆற்றை நெருங்க எனது கண்கள்
புலன்களுக்குச் சாணை பிடிக்கின்றது.

அதோ! அம்பலமாக....
தலைவிரிகோலமாக.... ஒரு பெண்...
நிச்சயமாக அந்த மருதமரத்தின்
மறைவிலேதான்
ஒளிந்திருக்கவேண்டும்.

'பேய்களுக்குத்தான் கால்கள்
நிலத்தில் தாவதாமே!'
அப்படியென்றால், சேற்றில் அழுங்கிப்
போயிருப்பது மனிதக்
கால்களல்லவா? எனது சிந்தனை
கூர்மை பெறுகிறது. கால்களை எட்டிப்
போடுகிறேன்.

"டாக்குத்தர் மாமா" பிஞ்சுக்
குரலொன்று அந்த இருட்டையும்
கிழித்துக்கொண்டு தவழ்ந்து
வருகிறது.

எனது டோர்ச்சின் வெளிச்சத்தில்
அந்தச் சின்னஞ்சிறுசு கண்களைக்
கூசிக்கொண்டே அண்மித்துவிட்டது.

இந்தப் பிள்ளையை நான்
எப்படியோ பார்த்த ஞாபகம்
ஒருகணம் மனதில் மின்ன
லென ஒரு மறைவு. அந்தநாள்
உடலோ ஞாபகத்திற்கு
வருகிறது. நான் இந்த
ஊருக்கு மாற்றலாகிவந்த
புதிதில் ஒருநாள் இந்தப்
பிள்ளையும் இதன் பிறக்க
இடையில் இன்னொரு
ருக்குமாக என் மனைவியிடம்
ஏதோ கேட்க, அவள் என்னிடம்
அபிப்பிராயம் கேட்டாளே!

'இதுகளெல்லாம் இப்பிடித்
தான். யாருக்காவது
வித்துப்போட்டு நாளைக்கும்
நமக்கிட்டெ வந்து
பல்லைக்காட்டுங்கள். நீ
உன்ர வேலையப்பாரு'.

எனது சினத்தைக் கண்டதும்
அந்தச் சிறுசுகள்
சென்றுவிட்டன.

அன்று வந்த அந்த மூத்த
சிறுமிதான். இந்த நேரத்தில்
இங்கே -

"என்னெ பிள்ளெ இந்த
நேரத்திலெ"

பயத்தினைப்போலே கண்களைக்
கசக்கிக்கொண்டே அவள்
ஒவ்வொரு வார்த்தையாகச்
சொல்கிறாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"உம்மாக்குத் தண்ணி வாக்கெ
உடுத்தாடெல்ல மாமா. அதான்
நாங்கெ ராவிலெ ஆத்துக்கு வந்து
குளிக்கிம். ஆனைகள் வாறதுக்கு
முந்தி போவதும் மாமா!"

திடீரென எங்கிருந்தோ ஓடிவந்த
காட்டு ஒமை என் மனக்குளத்தைக்
கலக்கி - சேற்றை வாரி வானம்
முகத்தில் அடித்ததைப்போல....

அந்த வார்த்தைகளில்
கன்னிவெடியில் நான்
சிக்குண்டவனாகிய நிலையில், ஒரு
நெற்றிப்பொட்டில் 'விண்'ணென்று
வலி எடுக்குது.

"பிள்ளெண்டா நாளைக்கு எங்கெடெ
பள்ளாக்கு வாறிய?" அந்தக் குஞ்சு
தலையை ஆட்டுகிறது.

'பள்ளையெண்டெ பொஞ்சாதியின்
ஆவியோ பாதிதிருந்தாலுங்கூட
என்டெ மனம் இப்பிடிப்
பிஞ்சிரிக்குமோ நானறியேன்!'

.....

மனத்திலே எடுத்தாக அடக்க
இயலாத பாரத்தினை ஏற்றி
வைத்ததைப்போல....

மறுக்க வழிப்பாட்டில் மீண்டும்
பயணம்.

வழியில் துறைக்காரரே
பொஞ்சாதியும் பிள்ளைகட்ட
உம்மாவும் எதிர்பார்த்துப்
பார்த்திருப்பவர்களைப் போலெ...

"என்னெ டாக்குத்தர், பேயைப்
பாத்தீங்களா?" இருவரும் ஒரு
காலத்தில் கேட்கிறார்கள்.

நானோ மௌனமாக ஐயையக்
கண்ணீர் வடிக்கிறேன்.

வைதல் காற்றோடு அவர்கள்
கேள்வி கலந்து சிதற - எனது
கால்கள் நடைபோடுகின்றன.

கொஞ்சதூரம் வந்திருப்பேன் -
புளியடிச் சந்தியாலே நான்
திரும்பும் போது.... அவர்கள் -

"டாக்குத்தர் நம்மைப்
பயந்திட்டாரு போலெயான்.
அடியேய் மரியம் இஞ்ச வந்து
பார்த்தாயாடி மாத்தயாடெ
கோலத்தை..."

நன்றி : 'அவளும் ஒரு பாற்கடல்'
(சாலக்கவி பதிப்பக வெளியீடு - 2010)



# 'ஏறாவூர் தாஹிர்' இன் இரு கவிதைகள்

## 1] இரவுகளில்...

தினமும்
மழையைக் கொட்டுகின்ற
கண்ணீருடன் சேர்த்து,
அருவியாய் நீள்கின்ற
செந்நீரையும் கலந்து
நீர் மின் நிலையமொன்றை
நிர்மாணம் செய்யலாமே !;
நிரந்தரமாய் !

சேவலின் நாமக் கூவல்
செவிப்பறைக்குள் பாங்கொலியாய்...
தெரு நாய்க் குரைப்பில்
முழு நாய்களும் திரண்டு...
இடைக்கிடை...
அந்தகளின் அழுகைகள்!,
இறுகிய போர்வைக்குள்
இருட்டின் அட்டகாசம்
இமைகள் மூடாமலே....மூடவிடாமலே....
மனதில்,
மகிழ்ப்படுத்தப்பட்ட
மரித்ததை நினைத்த படி
சயனச் சுகத்தில்
சஞ்சரிக்க விடாமல்....
உறவுகளின் உருக்குலைவும்,
உதறல் அதிர்வுகளும்
உரத்தல்களாக.....
படுக்கை விரிப்பில்
நெருஞ்சிமுட் பதிப்புக்கள்
போல, பொலத்து விடியும்வரை...;
மரித்ததை, மதிப்பாரில் மாத்திரம்!


## 2] இடைவெளிகள்!

சதாவும் என்,
நெஞ்சறைக்குள் ஒரு
கொஞ்சும் கிளி!
மழலை மொழிகளுடன்!
மனக்காட்டில் ஒரு
புள்ளிமான்!
துள்ளிக் குதித்தாடி!
நிழலாய் ஒரு கோலமயில்!
தோகை விரித்தாடி!
செவிப் பறையுள்
குயிற் குஞ்சு!
கானம் இசைத்தாடி!

பூ வொன்று பூப்பதும்,
பூத்துக் கமழ்வதும்,
இதழ்கள் உதிர்ந்த பின்
இன்னொன்றலர்வதுமாய்...
நெஞ்சச் சுவர்களை
நெருடும் நினைவுகளாய்!
நினைவுகளின் நிகழ்வுகளும்,
நிகழ்வுகளின் நினைவுகளும்
நிரைப்பட மறுத்து,
பின்னிப் பிணைந்து
நீண்டு நெளிவதுமாய்!

உணர்வற்ற உயிர்ப்பில்
உயிரற்ற உணர்வலைகள்!
உசுப்பி உயிரூட்டும்
எத்தனிப்பில், மெத்தனமாய்
உறங்கிக் கிடக்கின்ற
நீ, நான் இடைவெளிகள்!



## "சிரி" கதை

அவன் ஒன்பதே வயது நிரம்பிய சிறுவன்; குறும்பன்; ஆனால் கெட்டிக்காரன். ஆனால் அவனில் உள்ள ஒரே ஒரு குறைபாடு அவனுக்கு உணவுகளில் அக்கறையின்மைதான். சுருக்கமாகச் சொன்னால் அவன் உண்பதே இல்லை எனலாம். குமார் என்பது அவனது 'திருநாமம்'.

அவனது பெற்றோர்களுக்குத்தான் பெரிய மனக்குறை; செருக்கேயில்லை என்று கூடக் கூறலாம். அவனது உணவு விடயத்தில் – அவனுக்குப் பிடிக்காத உணவு வகையே இல்லை. ஆனால் அவனோ உண்ண மறுத்தான். ஒரே ஒரு மகன் என்பதாலும், சிறுவன் என்பதாலும் அப்பாவும், அம்மாவும் சற்று வசதியானவர்கள் என்பதாலும் கேக், பிஸ்கற், இனிப்பு வகைகள், ஐஸ்கிறீம், மிட்டாய் எல்லாவற்றையும் கொடுத்துப் பார்த்தார்கள். ம்–ஹூம்! அவன் பசியே ஒன்றுக்கும் மசியவில்லை. மருத்துவ நிபுணர்களிடம் காட்டிப் பார்த்தார்கள். அதுவும் சரிவரவில்லை. வாழ்க்கையே இருண்டதாக எண்ணிக் கொண்டிருந்த போது அவர்களது வட்டிய உறவினர், சற்று வயது முதிர்ந்தவர். இவர்களது வீட்டிற்கு வருகை தந்தார். குமாரின் பெற்றோரும் தமது மனக்கவலைகளைக் கொட்டித் தீர்த்தார்கள். அவர் ஒரு யோசனை கூறினார். ஒரு மனோ தத்துவ நிபுணரின் பெயரைக் குறிப்பிட்டு குமாரை அவரிடம் அழைத்துச் செல்லும்படி கூறினார்.

பெற்றோரும் நல்ல நாளாகப் பார்த்து குமாரை அந்த மனோதத்துவ நிபுணரிடம் அழைத்துச் சென்றனர். இவர்களை வரவேற்று அமரச் செய்த நிபுணர் விபரங்களைக் கேட்டறிந்து கொண்டார்.

குமாரைப் பார்த்து "தம்பி என்ன சாப்பிடுகிறாய்?" என்று அன்புடன் கேட்டார். "எனக்கு ஒன்றும் வேண்டாம்" என்று குமார் வேண்டா வெறுப்பாகக் கூறினான். வைத்திய நிபுணரோ சற்றும் மனம் கோணாமல் "குமார், உனக்கு என்ன தான் வேண்டும்?" என்றார். குமாரோ மீண்டும் பிடிவாதமாக, "எனக்கு ஒன்றும் வேண்டாம்" என்று வேண்டா வெறுப்பாகக் கூறினான்.

பெற்றோரோ "அப்படியெல்லாம் டொக்டருடன் பேசக்கூடாது" என்று குமாரைக் கண்டித்தார்கள். வைத்தியரோ, "பரவாயில்லை. சின்னப் பையன் தானே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்படித்தான் சிகிச்சை செய்ய வேண்டும்; போகப் போக எல்லாம் சரிவரும்!" என்று கூறிப் பெற்றோரைச் சமாளித்துவிட்டுக் குமாரை நோக்கி, "சரி தம்பி, உனக்கு என்னதான் சாப்பிட வேண்டும்?" என்று அன்புடன் வினாவினார்.

சற்று யோசித்த அந்தக் குறும்பன், "மண்புழு வேண்டும்!" என்றான். பொறுமையிழந்த பெற்றோர் குமாரை அடித்துத் தண்டிக்க எத்தனித்தனர். வைத்திய நிபுணர் அவர்களைத் தடுத்து நிறுத்திவிட்டு தனது ஊழியர் ஒருவரை மணியடித்து அழைத்து, "எங்கிருந்தாவது ஒரு மண்புழு கொண்டு வா!" என்று பணித்தார்.

அவரும் ஓடோடிச் சென்று எங்கிருந்தோ ஒரு மண்புழுவைக் கொண்டு வந்து சேர்த்தார். "இனி என்ன?" என்பது போல் வைத்தியர் குமாரைப் பார்த்தார். "மிளகு, உப்பு போடுங்கள்" என்றான் குமார். வைத்தியர் ஊழியரைப் பார்த்துக் கண்ணசைத்தார். மண்புழுவுக்கு உப்பு, மிளகு போடப்பட்டது. "இரண்டு துண்டாக வெட்டுங்கள்" என்றான் குமார். அப்படியே வெட்டப் பட்டது. டாக்டரைப் பார்த்து "நீங்கள் ஒரு துண்டைச் சாப்பிடுங்கள், நான் மற்றத் துண்டைச் சாப்பிடுகிறேன்" என்றான் குமார்.

பெற்றோருக்குக் கோபம் தலைக்கேறியது. "இவன், என்ன மகன்? டாக்டரைப் பார்த்து மண்புழு சாப்பிடச் சொல்கிறானே" என்ற எண்ணத்துடன் அடிப்பதற்காக கையை ஓங்கினார்கள். டாக்டரோ அவர்களை அடக்கிவிட்டு, "இப்போதுதான் சிகிச்சை ஆரம்பமாகியுள்ளது. ஒன்றுக்கும் யோசிக்க வேண்டாம்" என்று ஆறுதல் கூறிவிட்டு குமார் கேட்டுக்கொண்ட படியே மண்புழுத் துண்டொன்றை எடுத்து மிகவும் கஷ்டப்பட்டுச் சாப்பிட்டார். என்ன இருந் தாலும் மனோதத்துவ நிபுணரல்லவா?

ஆனால் குமாரோ நிலத்தில் புரண்டு "ஐயோ, முறையோ" என்று அழத் தொடங்கினான். இடைக்கிடையே, "டாக்டர் மண்புழுவின் பெரிய துண்டைச் சாப்பிட்டுவிட்டார். எனவே மற்றத்துண்டை நான் சாப்பிட மாட்டேன்!" என்று சொல்லிச் சொல்லி அழுதான் அந்த ஒன்பது வயதுக் குறும்புக்கார பையன்.



வைத்தியசாலை ஊழியர்கள் உட்பட அனைவரும் அதிர்ச்சியுற்றுப் பார்த்தார்கள்!

- இளவாலை இரகு -








சஞ்சிகைகளைப் பொறுத்தவரையில் சாதாரண வாசகர்களை ஈர்க்கக்கூடிய ஆக்கங்களை வெளியிடும் சஞ்சிகைகள்தான் வளர்ச்சியடைய முடியும். அதற்காக மலிவான இரசனையுடைய ஆபாசமான ஆக்கங்கள் என்று அர்த்தமல்ல.

சிறுகதைகளைப் பொறுத்தவரையில் அரசியல் மற்றும் சமூகத்தில் நடக்கும் ஊழல்களை எவரும் புண்படாத வகையில் நகைச்சுவையாக வட்டார வழக்கில் எழுதலாம். இவ்வாறு விகட நடைகளிலும் நகைச்சுவையோடு ஆக்கங்களைத் தரலாம். எழுபதுகளில் கவிஞர் நீலாவணன் 'மலர்' சஞ்சிகையில் விருத்தாந்த சித்திரம் என்ற தலைப்பில் எழுதிய விசி மெய்யர் கதைகள், பவளம் பஞ்சலிங்கம், சம்மா சுந்தரலிங்கம் ஆகிய படைப்புகள் நல்ல உதாரணங்கள். அக்காலப் பகுதியில் யா/ கொழும்புத்துறை ஆசிரிய பயிற்சிக் கல்லூரியில் ஆசிரிய மாணவனாக இருந்தேன். மலரில் அதை மட்டும்தான் வாசித்தேன். பலரிடம் அதை வாசித்துக் காட்டியிருக்கிறேன். ஆகவே இப்படியான ஆக்கங்களை செங்கதிரில் வெளியிட்டால் அதன் வளர்ச்சிக்கு உதவியாக இருக்கும்.

அடுத்து இன்று பல சஞ்சிகைகளில் போட்டியில் பரிசுபெறும் கதைகள் பல சாதாரண கதைகளைவிட தரம் குறைந்ததாகக் காணப்படுகின்றது. அநேகமாகத் தெரிவுக் குழுவினர் ஏற்கனவே பிரபலமடைந்துள்ள பல எழுத்தாளர்களின் படைப்புக் களையே தெரிவு செய்கின்றனர். ஒரே படைப்பின்மூலம் உலகில் புகழ் பெற்றவர்களும் இருக்கிறார்கள்.

உதாரணமாக வீட்டொன்றில் பணிப்பெண்ணாக கடமையாற்றிய செரி நைட்டர் "ஸ்லம்டோக் ஆர்டிஷன்" என்ற முதல் நூலின் மூலம் இந்தியாவின் பெஸ்ட் செல்லர் எழுத்தாளராக உயர்ந்து விட்டார். ஆகவே சரியான நேர்மையான தெரிவின் மூலமே தரமான படைப்புக்களை கண்டறிய முடியும்.

திரு. பீ.பீ. அந்தோனிப்பிள்ளை
ஆத்தியடி, முதலைக்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செங்கதிர்

# விடியலின் திசை

சிவந்து கிடக்கும் கிழக்கு வானில்
செங்கதிர் மெல்ல எழுகிறது!
தவழ்ந்து வரும் மேழைச் சிரிப்பில்
தீந்தமிழ்த் தென்றல் மலர்கிறது!
அவிழ்ந்த மலரும் மங்கையைப் போலாய்
இன்முகம் காட்டிச் சிரிக்கிறது!
உவந்து தமிழில் இலக்கிய இன்பம்
ஊட்டிட மேனி சிலிர்க்கிறது!
தலைமுறை யாகத் தொடரும் யுத்தம்
தரணியில் செந்நீர் விதைத்திடினும்
இலைமறை காயாய் இருக்கும் நல்ல
இலக்கியம் கண்டு வெளிக்கொணர்ந்து
நிலைபெறும் நோக்கில் மாணவர் ஆய்வு
நிகழ்வுகள் ஊடே தமிழ் வளர்ந்து
மலையெனும் துன்பம் பனியெனத் தீர
முளைத்திடும் வேட்கை வாழியவே!
அழிவுகள் வாழ்வாய்த் தொடரும் மக்கள்
அறிவின் பொறியைத் தூண்டிவிட்டு
பழியுடன் போதும் கொலைகளும் தொடரல்
போதும் என்றுடன் நிறுத்தி விட்டு
தெளிவுடன் மாந்தர் ஒற்றுமை பாட்டில்
நெறியில் முழுமை கொண்டிலங்கும்
வழியினைக் காட்டும் வையகத்தில் செங்கதிர்
விடியலின் திசையைக் காட்டட்டும்!
சிறுகதை, கவிதை, கட்டுரை, பேட்டி
சிரிப்புடன் சிந்தை கவர்ந்திடும் ஆக்கம்
பெருநடை யுடனே பழந்தமிழ்ச் செல்வம்
புதுமையாம் விந்தை விஞ்ஞான விடயம்
உறுநோய் தவிர்க்கும் சுகநலத் தகவல்
உழைப்பவர் மேன்மை அடைந்திடும் வழிகள்
பொறுப்புடன் தொகுத்துப் படைத்திடும் தமிழில்
பெருமை நின்று நிலைத்திட வேண்டும்!

- மாவை வரோதயன்



'இலட்சியம் இல்லாமல் இலக்கியம் இல்லை' என்ற மகுட வாசகம் செங்கதிரைச் சிறப்பிக்கின்றது. செங்கதிர் என்ற பெயரும் இலச்சினையும் மிக நன்று. சிறு சஞ்சிகைகளின் வரவு மழைக்குத் தோன்றும் புற்றீசல் போன்றது. ஆனால் மல்லிகை, ஞானம், தாயகம்....போன்றன இதற்கு விதிவிலக்கு. இவ்வாறான ஒரு கருத்தை நண்பர் மகாராஜாவிடம் தெரிவித்தபோது 'செங்கதிர்' இக்கருத்தை உடைக்கும் என்று நம்பிக்கையோடு சொன்னார். உண்மையில் 'செங்கதிர்' தொடர்ந்தும் தன் கதிர்களை நாடு பூராவும் பரவச் செய்ய வேண்டுமென வாழ்த்துகின்றேன்.

பன்னிரண்டாம் திங்களிதழ் என்று குறிப்பிட்டதால் ஆக்கங்கள் பெறுவதோ, வாசகர்களைச் சேர்ப்பதோ கடினமாக இருக்காதென நம்புகிறேன். இளையோர் பக்கம், பூங்கதிர் எனும் மகளிர் பக்கம், குறுக்கெழுத்துப் போட்டி அடுக்க இதழில் அடுத்து தொடங்கப் போகும் இங்கே விடை எங்கே வினா?, அடுத்த இதழுக்கே கிடைக்கப் போகும் வாசகர் அபிப்பிராயங்களை, ஆலோசனைகளை கொண்ட பகுதியில் என பகுதரப்பட்ட வாசகர்களையும் கவரக்கூடிய பல்வேறு விடயங்களைச் சேர்ப்பது செங்கதிரைச் சிறப்பாக்கும்.

அதிதிப் பக்கம் என்றொரு பகுதி இதுவரை எந்த சஞ்சிகைகளிலும் வெளிவரவில்லை. செங்கதிரின் அதிதியாய் அதிரும் கல்வித் துறையோடு தொடர்பான நல்ல மனிதர், நிறையத் தேடி எல்லோருக்கும் பயன்படச் செய்யும் பேராசிரியர் சந்திரசேகரனின் 'விபரமும், கல்வியும் நவீனமயமாக்கலும்' என்ற கட்டுரையும் செங்கதிரை மேலும் சிறப்பித்துள்ளது. அடுத்த அதிதி யார்? அவருடைய கட்டுரை என்ன? என்ற கேள்வி செங்கதிரின் போக்கை நிர்ணயிக்கலாம். மீண்டும் கல்வித் துறை தொடர்பானவர் அதிதியாகி அவருடைய கல்வி தொடர்பான கட்டுரைதான் வருமா? மாற்றுவது நல்லது என்பது என் அபிப்பிராயம். ஏனெனில் கல்விக்கு 'அகவிழி' அந்தப் பணியினை செய்கின்றது என நினைக்கிறேன்.

எங்கள் கல்விக் கல்லூரி, செங்கதிர் தன் கதிர்களைப் பரப்ப நல்ல களமென நினைக்கிறேன். அண்ணளவாக 400 ஆசிரிய பயிலுனர்கள் படிக்கும் வாய்ப்புண்டு. நான் தமிழ் மன்ற போஷகராக இருப்பதால் இளையோர் பக்கத்திற்கு நிறைய ஆக்கங்கள் அனுப்பிவைக்கலாமென நம்புகிறேன். மேலும் தாராளம் எழுதுவதாம் என்னுடைய ஆக்கங்களையும் அனுப்புவேன். அடுத்த முக்கிய விடயம் சந்தா. எங்கள் நூலகத்திலிருந்தும், ஒரு சில ஆர்வமுள்ள விரிவுரையாளர்களிடமிருந்தும் சந்தா அனுப்ப ஆவன செய்வேன். வேறென்ன ஆக்கங்கள் தரமாயுள்ளன, கலை (A-9)க்கவிதை பலமாகத் தொட்டது.

க.பரந்திராம்
கல்விக் கல்லூரி,
வவுனியா.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'செங்கதிர்' மாசி மாத இதழ் பார்த்தேன். சென்ற இதழை விட மேலும் சிறப்பாக வந்திருக்கிறது. உள்ளடக்கம், அட்டைப்படம் யாவுமே திருப்தியைத் தருகிறது. கொஞ்சம் தாமதம் தான் என்றாலும் இதழின் காதி அதை மறக்கப்பண்ணிவிட்டது.

செ. குணரத்தினம்
பால்சேனை.

'செங்கதிர்' இதழ் படித்தேன். செங்கதிரின் ஆசிரிய பக்கத்தில் இருந்து அவன் குறிக்கோள் புலப்படுகின்றது. இன்றைய நிலையில் ஒரு சஞ்சிகை நடத்துவது மிகவும் கடினமான முயற்சி. தங்கள் துணிவையும் ஆர்வத்தையும் பாராட்டுகிறேன்.

க. கணேசலிங்கம்
64 - 5/4, சென் மேரிஸ் வீதி, கொழும்பு - 6
Email. kganeshalingam @ yahoo. com

'செங்கதிர்' இரண்டு இதழ்களும் பெற்று பேருவகை கொண்டேன். விடயங்கள், தகவல் தொகுப்புகள் சிறப்பாக உள்ளன. ஒரு குறுகிய வட்டத்திற்குள் நிற்க விரும்பாமல், அச்சிறிய வட்டத்தை திருப்திப்படுத்த நினையாமல் இதழ் தொடர்ந்தால் நிச்சயமாக இலக்கியத்திற்கு இலட்சியம் இருக்கும். அவ்வாறே வெளிவர எதிர்பார்க்கிறேன்.

மானா.மக்கீன்
B54 - 1/2 - N.H.S. Flats, Colombo.

## தமிழறிவோம்

'அற்பனுக்குப் பசி வந்தால் அர்த்த ராத்திரியில் குடை பிடிப்பான்' என்பது பழமொழியொன்றின் பேச்சு வழக்கு. சிலர் எழுத்திலும் இப்படியே எழுதுகின்றனர். 'பசி' என்பது பிழை. 'பவிசு' என்பதே சரி. 'அற்பனுக்குப் பவிசு வந்தால் அர்த்த ராத்திரியில் குடை பிடிப்பான்' என்பதே சரியானது. இங்கே 'பவிசு' என்பது தற்பெருமையைக் குறித்து நிற்கின்றது.

- [illegible] -



# சாவதற்கு நான் ரெடி இயமனே நீ ரெடியா?

கவிஞர் : செ.குணரத்தினம்

இறப்பதற்கு நான் ரெடி !
இயமனே , நீ ரெடியா ?
சித்திர புத்திரரே
என் கணக்கை முடி !
இன்னும் நான் வாழ்வதற்கு
காரணங்கள் இருந்தால்
அதையும் அழி !

கவிதை நூலொன்று
வெளியிட ஆசைதான் !
அதுவும் முடியவில்லை !
அதனால் ஆசையை அழி !

நான் எழுதித்தான்
தமிழ் வாழவேண்டுமென்றில்லை.
தமிழ் தான் என்னை வாழவைத்தது.
அது போதும் எனக்கு.

எவராவது வந்து
என்னைக் கொல்வதற்குள்
இயமனே நீ வா !
சாவதற்கு நான் ரெடி !



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**அறிவித்தல்**

## விரைவில் இலண்டனில்
## ஈழத்து தமிழ் நூற் கண்காட்சி – 2008

ஈழத்துப் புலம்பெயர் தமிழ் எழுத்தாளர்களின் எழுத்து வடிவங்கள் காட்சியில் இடம்பெறும். அரசியல், அழகியல், ஆன்மீகம், இதிகாசம், இசையியல், சமயம், வரலாறு, ஓவியம், ஓலைச்சுவடிகள், நாவல், நாடகம், சிறுகதை, சிறுவர் இலக்கியம், கவிதை, திரைப்படப்பிரதி, தொல்லியல், நூலகவியல், போராட்டப்பதிவுகள், சிறு சஞ்சிகை, விவசாயம், புவியியல், சோதிடம், மொழிபெயர்ப்பு..... என விரியும் ஈழத்து நூல்களின் கண்காட்சி.

உங்கள் படைப்புக்களுடன் படித்து முடித்த நூல்களும் ஈழத்து எழுத்தாளர்களின் ஒலி, ஒளி இறுவட்டுக்களும் அனுப்பலாம். அனைத்து எழுத்தாளர்களின் பழைய புதிய படைப்புக்களையும், அமரத்துவமான படைப்பாளிகளின் புகைப்படம் உள்ளிட்ட தகவல்களையும் அனுப்புங்கள்.

இந்தக் கண்காட்சிக்கு தங்களால் முடிந்த ஒத்துழைப்புக்களை வழங்குமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

**தொடர்புகட்கு:**

**R. MAHENDRAN** (முல்லை அமுதன்)
34, RED RIFFE ROAD
PLAISTOW
LONDON
E13 OJX
Tel: 0208 5867783
**E-mail :** mullaiamuthan_03@hotmail.co.uk



## குறுக்கெழுத்துப் போட்டி - 04

விடைகளை அனுப்ப வேண்டிய முகவரி :

ஆசிரியர்,
'செங்கதிர்',
குறுக்கெழுத்துப் போட்டி-02
19, மேல்மாடி வீதி,
மட்டக்களப்பு.

1ஆம் பரிசு ரூ 500/=
2ஆம் பரிசு ரூ 300/=
3ஆம் பரிசு ரூ 200/=

விடை அனுப்ப வேண்டிய இறுதித் திகதி

**31.05.2008**

### குறுக்கெழுத்துப் போட்டி - 04

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 |
| 8 | 9 | 10 | 11 | 12 | 13 | 14 |
| 15 | 16 | 17 | 18 | 19 | 20 | 21 |
| 22 | 23 | 24 | 25 | 26 | 27 | 28 |
| 29 | 30 | 31 | 32 | 33 | 34 | 35 |
| 36 | 37 | 38 | 39 | 40 | 41 | 42 |
| 43 | 44 | 45 | 46 | 47 | 48 | 49 |

பெயர் : ...............................................

முகவரி : ...............................................

...............................................

கையொப்பம் ............................ திகதி : ...............

**இடமிருந்து வலம்**

01) 2006/2008ம் ஆண்டின் பெயர்.
06) மன்னன் ஒருவரின் பெயர்.
15) தாய் வழிச் சொத்தை இப்படியும் அழைப்பர்.
17) [illegible]
23) தமிழ் இலக்கணச் சொல்லொன்று குழம்பியுள்ளது.
27) பாடு
38) திருடனில் ஒரு எழுத்தைக் கிழித்து விட்டால்.
43) [illegible]

**மேலிருந்து கீழ்**

01) [illegible] மக்கள் இன்று [illegible] இருக்கிறார்கள்.
03) [illegible] வழியும் இடம்.
07) [illegible]
11) [illegible] பெயர்.
15) [illegible]
23) உதவியாளர்.
26) [illegible]
27) [illegible] இல்லை.
30) [illegible]
32) இது போல் கடாது.
33) [illegible]



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## குறுக்கெழுத்துப்போட்டி – 02, பரிசு பெற்றோர் விபரம்

1ம் பரிசு - **செல்வி. யோ. மதுரா**
'யோகவாசா' திருக்கோவில்.

2வது பரிசு - **M.S.ஜெயவீரரெத்தினம்**
பெத்தனி, கிரான்.

3வது பரிசு - **வ. நிறோஷன்**
இல.63/10,
புகையிரத நிலைய வீதி,
மட்டக்களப்பு.

காசோலைகள் அனுப்பி வைக்கப் பட்டுள்ளன.

## குறுக்கெழுத்துப்போட்டி – 01, சரியான விடை

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 1 கொ | 2 லை | 3 ம் | 4 ர | 5 கா | 6 ல | 7 ப் |
| 8 மு | 9 | 10 கா | 11 ல் | 12 ரி | 13 ச | 14 வ |
| 15 ந | 16 உ | 17 டு | 18 க் | 19 கை | 20 ம் | 21 ண |
| 22 து | 23 டு | 24 ப் | 25 பு | 26 கை | 27 ம | 28 ந் |
| 29 ப் | 30 ப் | 31 மே | 32 தை | 33 ப | 34 ந் | 35 தி |
| 36 பு | 37 பு | 38 ழி | 39 ய | 40 க | 41 தி | 42 ல் |
| 43 அ | 44 லி | 45 | 46 ல் | 47 டை | 48 ரை | 49 லை |

*அடுத்த இதழிலிருந்து.....*




**வாசகர்களின் வினாக்களுக்கு இப்பகுதியில் விடை அளிக்கப்படும். கலை. இலக்கியம் சார்ந்த வினாக்கள் வாசகர்களிடமிருந்து வரவேற்கப்படுகின்றன.**

அனுப்ப வேண்டிய முகவரி :

ஆசிரியர், 'செங்கதிர்',
இங்கே விடை..எங்கே வினா?
இல.19, மேல்மாடி வீதி, மட்டக்களப்பு.



NHS


# NASEELA

**HARDWARE & ELECTRICALS**

*Dealers and Distributors in all Kind of Hardware & Electrical Items*

**Moulana Complex,
Main Street,
Kattankudy - 02.**

**Tel / Fax : 065-2246582
065-2245528,
065-2247085**




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "AKARAM"

- Books
- Stationers









**"Aharam"**
82, Bar Road,
Batticaloa.
Tel : 060-2643986

ஈழத்து எழுத்தாளர்களது
நூல்கள் யாவும்
ஒரே இடத்தில் கிடைக்கப்பெற

# அகரம்

Sun Printers - 65, Iruthayapuram West, Batticaloa. 065-2222597

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org